லொயோலா

# ஈசி வணிகவியல்

# 11

புதிய பாடத்திட்டத்தின்படி
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்

www.Padasalai.Net

லொயோலா
பப்ளிகேஷன்ஸ்

விவேக் இல்லம் 19, ராஜ் நகர், N.G.O. ‘A’ காலனி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 007.
போன் : 0462 - 2553186
செல் : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹. 280/-

Less Strain Score More ★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

**ஆசிரியர் :**

திரு. **S. ஸையத் ஷாஹுல் ஹமீத்** **M.Com., M.Ed., M.Phil.,**

முதுகலை பட்டதாரி ஆசிரியர்

**லொயோலா**
**பப்ளிகேஷன்ஸ்**

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்


| அலகு | அத்தியாயம் | பாடம் | பக்கம் |
|---|---|---|---|
| **அலகு 1 - தொழிலின் அடிப்படைக் கூறுகள்** | | | |
| 1 | 1 | இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி | 5 |
| | 2 | தொழிலின் நோக்கங்கள் | 11 |
| | 3 | தொழில் நடவடிக்கைகளின் வகைகள் | 18 |
| **அலகு 2 - தொழில் அமைப்புகளின் வடிவங்கள்** | | | |
| 2 | 4 | தனியாள் வணிகம் | 25 |
| | 5 | இந்து கூட்டுக்குடும்பம் மற்றும் கூட்டாண்மை | 31 |
| | 6 | கூட்டுப் பங்கு நிறுமம் | 45 |
| | 7 | கூட்டுறவு அமைப்பு | 54 |
| | 8 | பன்னாட்டு நிறுமங்கள் | 62 |
| | 9 | அரசு அமைப்புகள் | 66 |
| **அலகு 3 - சேவைத் தொழில்கள் I** | | | |
| 3 | 10 | இந்திய ரிசர்வ் வங்கி | 73 |
| | 11 | வங்கிகளின் வகைகள் | 81 |
| | 12 | வணிக வங்கிகளின் பணிகள் | 87 |
| | 13 | பண்டகக் காப்பு | 96 |
| | 14 | போக்குவரத்து | 105 |
| | 15 | காப்பீடு | 116 |
| **அலகு 4 - சேவைத் தொழில்கள் II** | | | |
| 4 | 16 | இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள் | 126 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| **அலகு 5 - சேவைத் தொழில்கள் - III** | | | |
| **5** | 17 | தொழிலின் சமூக பொறுப்புணர்வுகள் | 134 |
| | 18 | தொழில் நன்நெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை | 139 |
| **அலகு 6 - தொழில் நிதியியல்** | | | |
| **6** | 19 | தொழில் நிதிமூலங்கள் | 144 |
| | 20 | பன்னாட்டு நிதி | 152 |
| | 21 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் | 157 |
| **அலகு 7 - வியாபாரம்** | | | |
| **7** | 22 | வியாபாரத்தின் வகைகள் | 162 |
| | 23 | வழங்கல் வழிகள் | 167 |
| | 24 | சில்லறை வியாபாரம் செய்தல் | 176 |
| **அலகு 8 - பன்னாட்டு வணிகம்** | | | |
| **8** | 25 | பன்னாட்டு வணிகம் | 187 |
| | 26 | ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள் | 193 |
| | 27 | பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் | 200 |
| | 28 | செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை | 206 |
| **அலகு 9 - இந்திய ஒப்பந்தச் சட்டம்** | | | |
| **9** | 29 | ஒப்பந்தத்தின் கூறுகள் | 211 |
| | 30 | ஒப்பந்த நிறைவேற்றம் | 217 |
| | 31 | ஒப்பந்த விடுவிப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை | 221 |
| **அலகு 10 - நேர்முக மற்றும் மறைமுக வரிகள்** | | | |
| **10** | 32 | நேர்முக வரிகள் | 225 |
| | 33 | மறைமுக வரிகள் | 230 |
| **அரசு துணைத்தேர்வு - ஆகஸ்ட் 2022** | | | **235** |
| **அரசு பொதுத்தேர்வு - மார்ச் 2023** | | | **238** |


www.Padasalai.Net

அலகு 1

தொழிலின் அடிப்படைக் கூறுகள்

அத்தியாயம் - 1

# இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ..................... என்று பெயர்** QY-2019 HY-2019 ஆகஸ்ட்-2022

அ) அங்காடி ஆ) சந்தை

இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி

**விடை: அ) அங்காடி**

**2. இடத் தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது .................** QY-2018 ஜுன்-2019 செப்-2020

அ) போக்குவரத்து ஆ) பண்டகசாலை

இ) விற்பனையாளர் ஈ) காப்பீடு

**விடை: அ) போக்குவரத்து**

**3. அர்த்தசாஸ்த்திரம் என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**

அ) சாணக்கியர் ஆ) வால்மிகி

இ) திருவள்ளுவர் ஈ) இளங்கோவடிகள்

**விடை: அ) சாணக்கியர்**

**4. வியாபாரம் மற்றும் வணிகம் ............ பேரரசில் பொதுவானவையாக இருந்தது** QY-2018 மார்ச்-2023

அ) பல்லவர் ஆ) சோழர்

இ) பாண்டியர் ஈ) சேரர்

**விடை: இ) பாண்டியர்**

**5. ........... முதன் முதலில் சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.**

அ) பால்பன் ஆ) வாஸ்கோடகாமா

இ அக்பர் ஈ) அலாவுதின் கில்ஜி

**விடை: அ) பால்பன்**

### II. குறுவிடை வினாக்கள்

**1. பண்டமாற்று முறை என்றால் என்ன?** HY-2018 மே-2022 மார்ச்-2020

பணம் கண்டுபிடிப்பதற்கு முன் ஒரு பொருளுக்கு மாற்றாக மற்றொரு பொருள் பரிமாற்றம் செய்யப்படும் முறையைப் பண்டமாற்று முறை எனலாம்.

**2. நாளங்காடி என்றால் என்ன?** QY-2018 QY-2019 மார்ச்-2019 செப்-2020 மார்ச்-2023

பகல் நேரத்தில் நடைபெறும் சந்தை வியாபாரம்) நாளங்காடி என அழைக்கப்பட்டது.

**3. அல்லங்காடி என்றால் என்ன?**

இரவு நேரத்தில் நடைபெறும் சந்தை வியாபாரம்) அல்லங்காடி என அழைக்கப்பட்டது.

### III. சிறு விடை வினாக்கள்

**1. வணிகம் பொருள் தருக.**

➢ முதன் முதலில் சிந்துச் சமவெளியில் வாழ்ந்த மக்கள் வியாபாரம் என்ற சொல்லைப் பயன்படுத்தியதாக அறிகிறோம். வாணியம் (அ) வாணிபம் என்ற சொல் தென்னிந்தியாவில் வழக்கத்தில் இருந்ததாக அறியலாம்.

➢ பண்டைய காலத்தில் நிலத்தில் விளைந்த பொருட்களில் தேவைக்கு மிகுதியாக உள்ளதை பண்டமாற்று முறையில் வியாபாரம் செய்து வந்தனர்.

➢ திருக்குறள் மற்றும் புறநானூறு போன்ற நூல்களில் வாணிகம் என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**2. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் விளக்குக.**

➢ பூம்புகாரில் உள்ள இரு பெரும் நகரங்கள் மருவூர்பாக்கம் (உள்நாட்டு நகரம் ) பட்டினம்பாக்கம் (கடலோர நகரம்).

➢ இவை பல்வேறு விதமான பொருட்கள் மற்றும் உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகளையும் அங்காடிகளையும் கொண்டிருந்தன.

**3. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?**

➢ கொற்கை துறைமுகம்

➢ சாலியூர் துறைமுகம்

➢ காயல்பட்டினம் துறைமுகம்

➢ மருங்காவூர் பட்டிணம் மற்றும்

➢ குமரி துறைமுகம்

### IV. பெருவிடை வினாக்கள்

**1. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. (ஏதேனும் 5)** QY-2018 HY-2018 மார்ச்-2019

**ஆள் சார்ந்த தடை :**

➢ உற்பத்தியாளர் சிலர். நுகர்வோர் பலர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- ➢ எனவே உற்பத்தியாளர் நுகர்வோரைச் சந்திக்கவும், நுகர்வோர் உற்பத்தியாளரைச் சந்திக்கும் வாய்ப்புக்கள் அரிது.
- ➢ இது ஆள்சார்த்தடை ஆகும். இத்தடை வியாபாரத்தின் மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி மூலம் நீக்கப்படுகிறது.

**இடத்தடை :**

- ➢ பொருட்கள் உற்பத்தி செய்வது ஒரு இடம். (மல்லிகை - மதுரை ஆனால் நுகரப்படுவது வேறொரு இடம் (சென்னை )
- ➢ இரு இடங்களும் நிலப்பரப்பில் தூரத்தால் பிரிக்கப்பட்டுள்ளது. இது இடத்தடை எனப்படும்.
- ➢ இத்தடையை நீக்குவது போக்குவரத்து நிலம், நீர், வான்)

**காலத்தடை :**

- ➢ உற்பத்தி செய்வது ஒரு காலம், ஆனால் அது நுகரப்படுவது மற்றொரு காலம்.
- ➢ உற்பத்திக்கும், நுகர்வுக்கும் இடைப்பட்டக் காலத்தில் பொருட்கள் அழுகிப்போகும் (பழங்கள் - காய்கறிகள் - மீன்) இதுவே காலத்தடை ஆகும்.
- ➢ இத்தடையை நீக்குவது பண்டகக்காப்பு ஆகும்.

**நிதித்தடை :**

- ➢ பொருட்கள் உற்பத்தி செய்து நுகர்வோருக்கு விற்றுப் பணமாக்கும் வரை அனைவருக்கும் (உற்பத்தியாளர் - மொத்த வியாபாரி - சில்லறை வியாபாரி - நுகர்வோர் நிதி வசதிக்கிடைப்பதில்லை.
- ➢ இது நிதித்தடை ஆகும். இத்தடையை நீக்குவது வங்கிகள், பிற நிதி நிறுவனங்கள்.

**இடர்பாட்டுத்தடை :**

- ➢ பொருட்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு போக்குவரத்து மூலம் கொண்டு செல்லும் போதும் பொருட்களைப் பண்டகத்தில் பாதுகாப்பாக இட்டு வைக்கும் போதும் பொருட்களுக்கு தீ, வெள்ளம், திருட்டு போன்றவை காரணமாக இடர் (நட்டம்) ஏற்படலாம்.
- ➢ இது (நட்டம்) இடர்பாட்டுத்தடை ஆகும்.
- ➢ இத்தடையை நீக்கக் காப்பீடு உதவுகிறது.

**2. பண்டமாற்று முறையின் குறைபாடுகள் யாவை?** செப்-2020

**உபரி இருப்பு வைக்க இயலாத நிலை** : பொருட்கள் தனது தேவைக்கும் அதிகமாகக் கையிருப்பு இல்லையெனில் பண்ட மாற்று முறை நடைபெறாது.

**இருவருக்கும் (வாங்குபவர் - விற்பவர்) நேரடித் தொடர்பு இல்லை :**

- ➢ வாங்குபவரும் விற்பவரும் நேருக்கு நேராகச் சந்திக்க வேண்டியது இம்முறையில் மிகவும் அவசியம்.
- ➢ ஆனால் இம்முறையில் சந்திக்க வாய்ப்பே இல்லை.
- ➢ இதனால் பண்டமாற்று முறை நடைபெறாது.

**இருவருடையத் தேவைகளும் ஒத்துப்போகாமல் இருத்தல் :**

- ➢ இருவரில் முதலாமவரின் உபரிப்பொருட்கள் இரண்டாமவருக்குத் தேவையாகவும்
- ➢ இரண்டாமவருடைய உபரிப் பொருட்கள் முதலாமவருக்குத் தேவையாகவும் (இருவரின் தேவையும்) ஒத்துப்போகவேண்டும்.
- ➢ இல்லையெனில் பண்டமாற்று நிகழாது.

**பொதுவான மதிப்பீட்டு அளவு இல்லை :**

- ➢ ஒவ்வொருபொருளுக்கும் தனித்தனி மதிப்புண்டு.
- ➢ மதிப்பீட்டில் யாதொருபொது (பண) மதிப்பும் பின்பற்றப்படுவதில்லை.
- ➢ பொருட்கள் மதிப்பீட்டு ஒப்புமையில் தடைகள் உள்ளன.
- ➢ இதனால் பண்டமாற்று நிகழாது.

**3. பண்டையத் தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக.** மே-2022

- ➢ தென்கொரமண்டல் கடற்கரை நகரமான பூம்புகார் தமிழ்நாட்டின் எல்லைக்குள் அமைந்துள்ள பல்வேறு இடங்களில் சர்வதேசவர்த்தக மையங்களைக் கொண்டிருந்த வரலாற்று சிறப்பைக் கொண்டது.
- ➢ சோழ சாம்ராஜ்ஜியத்தின் இரண்டாவது தலைநகரமாக விளங்கிய கடற்கரை நகரம் (பூம்புகார்) கி.மு. 200 வரையிலான காலக்கட்டத்தில் கிழக்கு மற்றும் மேற்கத்திய மக்களிடையே சர்வதேச வர்த்தகத்தின் முக்கிய மையமாக விளங்கியது.
- ➢ இதன் முக்கிய இறக்கு மதிப்பொருள் சில்க் (பட்டு ஆகும்.
- ➢ பூம்புகாரிலுள்ள இரண்டு பெரிய நகரங்கள் மருவூர்ப்பாக்கம் - (உள்நாட்டு நகரம்) பட்டினப்பாக்கம் - (கடலோர நகரம்) ஆகியவை உணவுப் பொருட்கள், மற்ற பொருட்கள் விற்பனை செய்யும் பெரும் வியாபாரிகளையும் அங்காடிகளையும் கொண்டிருந்தன.
- ➢ தொண்டி, கொற்கை, பூம்புகார், முசிறி ஆகிய துறைமுகங்களில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் வணிகமே சிறப்பிடம் பெற்றிருந்தன.
- ➢ சிறுபடகு , திமிலா, தோணி, அம்பு, ஓடம்புனை, கட்டுமரம், உள்நாட்டு வியாபாரத்தில் பயன்படுத்தப்பட்டன.
- ➢ பேரளவுக்காலம், மரக்கலம், வங்கம், நாவாய் வெளிநாட்டு வியாபாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி II – கூடுதல் வினாக்கள்

### I. ஒரு மதிப்பெண் வினாக்கள்

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. ஒரு பொருளுக்கு மாற்றாக மற்றொரு பொருள் பரிமாற்றம் செய்யப்படும் முறை............. ஆகும்.

**விடை : பண்டமாற்று முறை**

2. காவிரிப் பூம்பட்டினம்............... காலத்தில் ஒரு முக்கியத் துறைமுகமாக விளங்கியது.

**விடை : சோழர்**

3. இந்தியா ................. நாட்டிலிருந்து குதிரைகள், உலர்பழங்கள், பீங்கான் பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி செய்தது.

**விடை : சீனா**

**பொருத்துக:**

4. **பட்டியல் I ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையைத் தெரிவு செய்க :**

| | பட்டியல்-I | | | பட்டியல்-II |
|---|---|---|---|---|
| i) | ஆள்சார்த் தடை | - | 1) | காப்பீடு |
| ii) | காலத்தடை | - | 2) | வங்கி |
| iii) | நிதிசார்த்த டை | - | 3) | பண்டகக்காப்பு |
| iv) | இடர்ப்பாட்டுத் தடை | - | 4) | வியாபாரி |

| தொகுப்பு : | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 2 | 4 | 3 | 1 |
| ஈ) | 1 | 3 | 2 | 4 |

**விடை : அ) 4 3 2 1**

5. **பட்டியல் I ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையைத் தெரிவு செய்க :**

| | பட்டியல்-I | | | பட்டியல்-II |
|---|---|---|---|---|
| i) | காலப் பயன்பாடு | - | 1) | போக்குவரத்து |
| ii) | உருவப் பயன்பாடு | - | 2) | பண்டகக்காபப்பு |
| iii) | இடப் பயன்பாடு | - | 3) | புதிய பொருட்களை உருவாக்குதல் |
| iv) | உடமைப் பயன்பாடு | - | 4) | பொருட்களின் பரிமாற்றம். |

| தொகுப்பு : | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 4 | 1 |
| ஆ) | 2 | 3 | 1 | 4 |
| இ) | 3 | 2 | 1 | 4 |
| ஈ) | 3 | 1 | 2 | 4 |

**விடை : ஆ) 2 3 1 4**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **பட்டியல் I ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையைத் தெரிவு செய்க :**

| **பட்டியல்-I** | | **பட்டியல்-II** |
|---|---|---|
| i) அங்காடி | - | 1) இரு பெரு நியாமத் |
| ii) தூங்கா நகரம் | - | 2) இரவு நேரச் சந்தை |
| iii) நாளங்காடி | - | 3) பொருட்கள் விற்பனை செய்யும் இடம் |
| iv) அல்லங்காடி | - | 4) பகல் நேரச் சந்தை |

| **தொகுப்பு :** | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 2 | 3 |
| ஆ) | 2 | 4 | 3 | 1 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 3 | 1 | 4 | 2 |

**விடை : ஈ) 3 1 4 2**

7. **இதில் எது தவறானப் பொருத்தம்?**
அ) அறிவுசார்ந்த தடை - விளம்பரம்
ஆ) இடத்தடை - போக்குவரத்து
இ) காலத்தடை - பண்டகக்காப்பு
ஈ) நிதிசார்த்தடை - காப்பீடு
**விடை : ஈ) நிதிசார்த்தடை - காப்பீடு**

8. **இதில் எது தவறானப் பொருத்தம்?**
அ) கன்னியாகுமரி - கோமாரி
ஆ) மரக்காணம் - சோப்டானா
இ) பாண்டிச்சேரி - பொடுக்கி
ஈ) நாகப்பட்டினம் - கெபிரிஸ்
**விடை : ஈ) நாகப்பட்டினம் - கெபிரிஸ்**

9. **பூம்புகாரில் உள்ள உள்நாட்டு நகரம் மற்றும் கடலோர நகரம்.......**
i) மருவூர்ப்பாக்கம்
iv) நாகப்பட்டினம்
iii) காயல்பட்டினம்
iv) பட்டினப்பாக்கம்
அ) i மற்றும் ii ஆ) i மற்றும் iii இ) i மற்றும் iv ஈ) ii மற்றும் i
**விடை : இ) i மற்றும் iv**

10. **இதில் எது பண்டமாற்று முறைக்கான நிபந்தனை இல்லை?**
அ) இருவருக்கும் நேரடித் தொடர்பு இருக்க வேண்டும்
ஆ) இருவரின் தேவைகளும் ஒத்துப் போக வேண்டும்.
இ) இருவரிடமும் தேவைக்கு அதிகமாக உபரிப் பொருட்கள் இருக்க வேண்டும்
ஈ) இருவரிடமும் பணம் இருக்க வேண்டும்.
**விடை : ஈ) இருவரிடமும் பணம் இருக்க வேண்டும்.**

11. **கீழ்க்கண்டவற்றுள் எது தவறான கூற்றாகும்?**
அ) உற்பத்தியாகும் இடத்திலிருந்து நுகரப்படும் இடங்களுக்கும் பொருட்களை கொண்டு செல்லப் போக்குவரத்து உதவுகிறது
ஆ) பொருட்கள் உற்பத்தியான காலத்திலிருந்து அது நுகரப்படும் வரை அதைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுவது பண்டகக்காப்பு
இ) பொருட்களுக்கு இடர் ஏற்பாட்டால் அந்த இடரை நீக்க உதவுவது காப்பீடு.
ஈ) உற்பத்தியாளர், வியாபாரி, நுகர்வோருக்கு நிதி வசதி வழங்குவது தயாரிப்பாளர்.
**விடை : ஈ) உற்பத்தியாளர், வியாபாரி, நுகர்வோருக்கு நிதிவசதி வழங்குவது தயாரிப்பாளர்.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12. **கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கருத்தில் கொள்க**

**கூற்று** (A) : பொருட்கள் உற்பத்தி செய்வது ஒரு காலம், அது நுகரப்படுவது மற்றொரு காலம். அந்த இடைப்பட்ட காலத்தில் பொருட்கள் கெடாமல் பாதுகாக்க பண்டகம் அவசியம்.

**காரணம்** (R) : நெல் போன்ற பொருட்கள் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி ஆனால் ஆண்டு முழுவதும் தேவைப்படுகிறது. குடை, மழையங்கி போன்ற பொருட்கள் ஆண்டு முழுவதும் உற்பத்தி ஆனால் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் தேவைப்படுகிறது.

அ) A மற்றும் சரி. மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரி. மேலும் R என்பது A யிற்கான தவறான விளக்கம்
இ) A சரி ஆனால் தவறு
ஈ) A தவறு ஆனால் R சரி

**விடை : அ) A மற்றும் R சரி. மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்**

13. **காலத்தடையை மூலம் நீக்கலாம்** மே-2022

அ) விற்பனையாளர் ஆ) போக்குவரத்து இ) காப்பீடு ஈ) பண்டகசாலை

**விடை : ஈ) பண்டகசாலை**

## II. குறுவிடை வினாக்கள் - இரண்டு மதிப்பெண்கள்

1. **அங்காடி என்றால் என்ன?**

பொருட்கள் விற்பனை செய்யும் இடம் அங்காடி எனப்படும்.

2. **இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காஞ்சிப்பகுதியில் மதுரையைப் பற்றி எவ்வாறு குறிப்பிடுகிறார்?**

➢ மதுரை ஒரு இருபெருநியாமத் எனக்குறிப்பிடுகிறார்.
➢ இதன் பொருள், தூங்காநகரம் ஆகும்.
➢ அதாவது இடைவெளியின்றி 24 மணி நேரமும் வியாபாரம் நடந்ததாகக் கூறுகிறார்.

3. **பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகள் யாவை?** HY-2019

➢ ஒவ்வொருவரும் தேவைக்கு அதிகமாகப் (உபரி பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும்.
➢ இருவருக்கும் அப்பொருட்கள் உரிமைமாற்றுத் தேவையாக இருக்க வேண்டும். (இருவரின் தேவையும் ஒத்துப்போக வேண்டும்.)
➢ பரிமாற்றத்தின் போது இருவருக்கும் நேரடித் தொடர்பு இருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

## III. சிறுவிடை வினாக்கள் - மூன்று மதிப்பெண்கள்

1. **தமிழ்நாட்டின் முக்கியமான பண்டையக் கால வர்த்தக மையங்கள் யாவை?**

➢ ராமநாதபுரம்
➢ பொடுக்கி (அரிக்கமேடு - பாண்டிச்சேரி)
➢ நாகப்பட்டினம் நிகம் )
➢ காயல்பட்டினம்
➢ காவேரி பூம்பட்டிணம் (கெபிரிஸ்)
➢ மரக்காணம் (சோப்டானா)
➢ பெரியபட்டினம்
➢ கன்னியாகுமரி (கோமாரி)

2. **தமிழ்நாட்டின் கடலோரப்பகுதிகளில் முக்கியமான பண்டைய வர்த்தகமையங்கள் யாவைீ**

➢ அழகன்குளம் (ராமநாதபுரம்)
➢ பூம்புகார்
➢ வாசவசமுத்திரம்
➢ ஆலம்பறை
➢ மரக்காணம்
➢ மயிலாப்பூர் (மயிலாற்பான் - சென்னை )

3. **பண்டைய தமிழ்நாட்டின் வர்த்தக வளர்ச்சியில் சங்க காலத்தின் பங்கு என்ன?** First Mid-2018 QY-2018

➢ சங்க காலத்தில் உள்நாட்டு வியாபாரமும், வெளிநாட்டு வியாபாரமும் பண்ட மாற்று முறையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.
➢ இடைக்காலத்தில் வியாபாரம் பல்வேறுப் பகுதிகளை இணைக்க வழிவகை செய்தது. சங்க கால ஏடுகள், பெரும் வியாபாரிகள், அவர்களது பாதுகாப்புப்படை, சந்தைகள், கடைகள் மற்றும் வணிகக் குழுக்கள் பற்றிக்கூறுகிறது.
➢ வியாபாரத்தில் ஒருவர் மற்றொருவரையும் சார்ந்து இருந்துள்ளனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. செல்வத்தை உருவாக்குவது பற்றி அர்த்த சாத்திரத்தில் என்ன கூறப்பட்டுள்ளது?**

➢ சாணக்கியர் (கௌடில்யர்) இன் அர்த்த சாஸ்திரத்தில் வட இந்திய மௌரியக் காலப் பொருளாதார நிலையை விவரிக்கிறது.

➢ இதன் வாயிலாக 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சந்தையின் வரலாற்றினை அறிந்து கொள்ள முடிகிறது.

➢ உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அரசு குறிப்பிடும் ஓரிடத்தில் (மையப்படுத்துதல்) விற்பனைக்கு கொண்டுவரப்பட்டு முறையான வரிகள் செலுத்தப்பட்ட பிறகு விற்பனை செய்யப்படும்.

➢ இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த மேம்படுத்தப்பட்டது.

## IV. பெரு விடை வினாக்கள் - ஐந்து மதிப்பெண்கள்

**1. வடஇந்தியாவில் வணிகம் மற்றும் வியாபாரத்தின் வளர்ச்சியை விவரி.**

➢ அரசியல் மாற்றங்கள் இருந்தபோதும் 12ம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டுவரை இந்தியா செழிப்புடன் விளங்கியது.

➢ முதல் சுல்தான் ஆன பால்பன் அடர்ந்த வனப்பகுதியில் பாதைகளை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.

➢ அலாவுதீன் கில்ஜி, பொருட்களின் விலைகளைக் குறைத்தும், இறக்குமதி செய்யப்பட்ட (பெர்ஷியா) பொருட்களுக்கு மானியம் வழங்கியும் வியாபார வளர்ச்சிக்கு உதவினார்.

➢ அரேபியர்கள், வெளிநாட்டு வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தாலும், இந்திய வர்த்தகர்களான தமிழர்கள், குஜாரத்தியர்களை நசுக்க நினைக்காமல் ஆதரவு அளித்தனர்.

➢ கடலோர வர்த்தகம் மார்வாடிகள் மற்றும் குஜராத்தியர் கைகளிலும், மத்திய மேற்கு ஆசிய நிலப்பரப்பு வர்த்தகம் முல்கானியர்கள் (இந்துக்கள்) ஆப்கானியர்கள், குர்சானியர்கள் (ஈரானியர்) கைகளிலும் இருந்தது.

➢ வெள்ளி மற்றும் தாமிர நாணய முறை நிறுவப்பட்டு, சுல்தான் காலகட்டத்திற்குள் வர்த்தகம் செழித்தோங்கியது. டெல்லி, பம்பாய், அகமதாபாத், சோனார், சோனார்சன், ஜான்புர், லாகூர் போன்ற பெரிய நகரங்களில் நடைபெற்ற சந்தையினைஃபூரிஷ் என்ற பயணி விவரித்துள்ளார்.

➢ காபூல், அரேபியா, ஐரோப்பா, மேற்கு ஆசியா, சீனா போன்ற நாடுகளில் இருந்து குதிரைகள், உலர் பழங்கள், விலையுயர்ந்த கற்கள், உயர் தர ஜவுளி, கண்ணாடிப் பொருட்கள் (பீங்கான்) கச்சாப்பட்டு, பவளப்பாறைகள், வாசனை எண்ணெய், வெல்வட் போன்ற பொருட்களை இந்தியா இறக்குமதி செய்தது. இந்திய பொருட்கள் மலேசியா, சீனா, ஆப்கானிஸ்தான், பெர்சியா மத்திய ஆசியா, போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

➢ கைபர் கணவாய் வழியாக ஈராக், புகாரா போன்ற இடங்களில் இருந்து வந்தவர்கள், மலபார், குஜராத், காலிகட், காம்பிட், மங்களூர் ஆகிய இடங்களில் குடியேறி ஒரு பெரிய வணிக உலகத்தைக் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

**2. பண்டையத் தமிழ்நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தின் பங்களிப்பைப் பற்றி விளக்குக.** மார்ச்-2020 செப்-2020

➢ ரோமாபுரி, கிரேக்க வர்த்தகர்கள் பழங்காலத் தமிழ்நாட்டிற்கு வந்து பண்டைய சேர, சோழ, பாண்டிய மன்னர்களைச் சந்தித்து வணிகத் தொடர்புகளை ஏற்படுத்தினர்.

➢ சீன சோங் வம்சத்தினர் சோழர்களுடன் வலுவானவர்த்தக உறவுகொண்டிருந்தனர்.

➢ இந்தோனிஷியா மற்றும் மலேஷியாவை ஆண்டு கொண்டிருந்த ஸ்ரீவிஜய நகரப் பேரரசைச் சோழர்கள் கைப்பற்றி சீனாவுடன் கடலோர வணிகத்தைத் தொடர்ந்தனர்.

➢ 16 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நிறுவனங்களுடன் வர்த்தகம் செய்ததன் மூலம் இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்தது.

➢ கி.பி 1496ல் வாஸ்கோடகாமா இந்தியாவுக்கு வரும்போது அனைத்து புதியக் கடல் வழிகளையும் கண்டுபிடித்ததால் நாகரிக உலகத்தில் வர்த்தகத்தின் பெரும் தாக்கம் ஏற்பட்டது.

➢ 17 ம் நூற்றாண்டு வரை இந்தியாவின் உலகளவிய வர்த்தக பங்கு 55ளு ஆக இருந்தது. தற்போது 2ளு ஆகக் குறைந்ததற்குக் காரணம் ஐரோப்பியர்களின் பிரித்தாழும் சூழ்ச்சியின் மூலம் பல்வேறு அரசர்களை வீழ்த்தினர்.

➢ 17 மற்றும் 18 ம் நூற்றாண்டுகளில் இந்தியா துணி மற்றும் கப்பல் கட்டுதல் வர்த்தகத்தில் பெரும் புகழ் பெற்றிருந்தது.

➢ ஆங்கிலேயர்கள் படிப்படியாக இந்தியப் பிராந்தியர்களின் இளவரசர்களின் கட்டளைகளைப் புறக்கணித்து, ஜவுளிப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் போன்றவைகளின் ஏற்றுமதிக்குத் தடை விதித்தனர்.

➢ 1600ம் ஆண்டு தொடக்கம் முதல் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை கிழக்கிந்தியக் கம்பெனி ஆசியா முழுவதும் தங்கள் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்தது.

***** ******** *****

***



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அலகு 1

(அத்தியாயம் - 3)

# தொழில் நடவழக்கைகளின் வகைகள்

## பகுதி – I. புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. **இரும்பிலிருந்து தாதுக்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை என்பது**
அ) கட்டுமானத் தொழில்கள்
ஆ) தயாரிப்புத் தொழில்கள்
இ) பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள்
ஈ) மரபுசார் உற்பத்தித் தொழில்கள்
**விடை: இ) பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள்**

2. **ஒரு முழுப் பொருள் தயாரிக்கப் பலநிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது.........** HY-2018 ஆகஸ்ட்-2022
அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்
ஆ) செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்
இ) தொடர்முறை உற்பத்தித் தொழில்
ஈ) ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்
**விடை: இ) தொடர்முறை உற்பத்தித் தொழில்**

3. **அதிக அளவு அபாயத்தைக் கொண்டது** QY-2018 QY-2019 GMQ-2018 செப்-2020 மே-2022
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம்
இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்
**விடை: அ) உற்பத்தித் தொழில்**

### II. குறுவிடை வினாக்கள்

1. **வணிகத்தை வரையறு.** HY-2018 QY-2019 GMQ-2019 ஆகஸ்ட்-2022
➢ "வணிக நடவடிக்கைகள் பொருட்கள் வாங்குதலும், விற்றலும் முடிவுற்ற பொருட்கள் பரிமாற்றம் கொண்டதே ஆகும்". - எவ்லின் தாமஸ்
➢ "பொருட்களின் பரிமாற்றத்தின் போது ஏற்படும் ஆள்சார்தடை, இடத்தடை, காலத்தடை போன்றவைகளை நீக்குவதில் ஈடுபடுகின்ற எல்லா நடவடிக்கைகளின் மொத்தமே வணிகம் ஆகும்". - ஜே. ஸ்டீபன்சன்

2. **உற்பத்தித் தொழில் என்றால் என்ன?**
மூலப்பொருட்களை (வளங்களை) (இயந்திரம் - தொழில் நுட்ப உதவியுடன் முடிந்த பொருட்களாக (உபயோகிக்கவல்லபொருளாக) மாற்றுவது உற்பத்தி தொழில் என்கிறோம்.

3. **வியாபாரம் என்றால் என்ன?**
➢ பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றலை உள்ளடக்கியது வியாபாரம் ஆகும்.
➢ இது வணிகத்தின் முக்கிய அங்கமாக திகழ்கிறது. வியாபாரம் உள்நாட்டு வியாபாரம்,
➢ அயல்நாட்டு வியாபாரம் என இருவகைப்படும்.

### III. சிறுவிடை வினாக்கள்

1. **சேவைத் தொழில்கள் என்றால் என்ன?** QY-2019 மே-2022
➢ இத்தொழில்கள் (இயல்) பொருட்களை உற்பத்தி செய்வதில்லை.
➢ மாறாக சேவைப்பொருட்களை இலாபத்திற்கு விற்கின்றன.
➢ இதுவே சேவைத்தொழில்கள் ஆகும்.
➢ (எ.கா) கல்விச்சேவை, வங்கி, காப்பீடு
➢ மேலும் இவை தனிச்சேவை, பொதுச்சேவை மற்றும் விநியோக சேவை என வகைப்படுத்தப்படுகிறது.

2. **போக்குவரத்து - சிறுகுறிப்பு வரைக.**
➢ உற்பத்தி செய்த பொருட்கள் அனைத்தும், உற்பத்தி செய்த பகுதியிலேயே விற்பது அரிது.
➢ அவற்றை நாட்டின் (அ) உலகின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் நுகர்வோருக்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய பணியை செய்வது போக்குவரத்து ஆகும்.

### IV. பெருவிடை வினாக்கள்

1. **உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பிடு செய்க. (ஏதேனும் 5)**
QY-2018 QY-2019 HY-2018 HY-2019 GMQ-2019 மார்ச்-2023

| எண் | தலைப்பு | உற்பத்தி (தொழில்) | வணிகம் (வர்த்தகம்) | வியாபாரம் |
|---|---|---|---|---|
| 1 | பொருள் | மூலப்பொருட்களைத் தூய்மை செய்து முடிவுற்ற பொருட்களை தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கிறது. | உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்கள் நுகர்வோரைச் சென்று அடையும் வரை நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளையும் குறிக்கின்றது. | பொருட்களை வாங்குவது விற்பது போன்ற நடவடிக்கைகளைக். குறிக்கின்றது. |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | | | |
|---|---|---|---|---|
| 2 | உள்ளடக்கம் | மூலப்பொருட்கள் பகுதி முடிவுற்ற பொருட்களை முழு முடிவுற்றப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கைக-ளையும் உள்ளடக்கும். | வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடைய போக்குவரத்து வங்கி, காப்பீடு போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியது. | பொருட்கள் மற்றும் சேவைகள் பரிமாற்றம் உள்ளடக்கியது. |
| 3 | முதல் | மிக அதிகமான மூலதனம் தேவை | அதிகமான மூலதனம் தேவை | குறைவான மூலதனம் தேவை. |
| 4 | இடர்பாடு | அதிக அளவு (அபாயம்) இடர்பாடு கொண்டது. | மிதமான அளவு இடர்பாட்டைக் கொண்டது. | குறைவான மூலதனம் தேவை |
| 5 | பயன்பாடு உருக்கம் | பொருட்களின் உற்பத்தி மூலம் உருவப்பயன்பாட்டை உருவாக்குகிறது. | பொருட்களை இடம் பெயரச் செய்வதன் மூலம் இடப்பயன்பாட்டை உருவாக்குகிறது. | பொருட்களின் உரிமை மாற்றத்தின் மூலம் உடமைப் பயன்பாட்டை உருவாக்குகிறது. |

**2. சிறு குறிப்பு வரைக.**

**அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ) மரபுசார் உற்பத்தித் தொழில்கள் இ) கட்டுமானத் தொழில்கள்**

**அ. பகுப்பாய்வு (ஆராய்ச்சி) தொழிற்சாலை:** GMQ-2018 மார்ச்-2019

➢ ஒரு மூலப்பொருளிலிருந்து பல்வேறு வகையானப் பொருட்களைப் பகுப்பாய்வு செய்து பிரிப்பதை மேற்கொள்ளும் தொழிற்சாலை பகுப்பாய்வு தொழிற்சாலை ஆகும்.

➢ (எ.கா) i) கச்சா எண்ணெய் - எரிவாயு - பெட்ரோல் - டீசல் - மண்ணெண்ணெய்

ii) பால் - தயிர் - மோர் - நெய் - வெண்ணெய்- பால்கோவா

**ஆ. மரபுசார் உற்பத்தி தொழில்கள்:** GMQ-2018 மார்ச்-2019

நுகர்வோரின் உபயோகத்திற்காகச் சில தாவரங்கள், விலங்குகளை வளர்க்கும் தொழிற்சாலை மரபு தொழிற்சாலை ஆகும்.

➢ விலங்குகளை இனப்பெருக்கத்திற்காக வளர்ப்பது.

➢ (எ.கா) கோழிப்பண்ணை, ரப்பர் மரம் வளர்ப்பு, மீன்வளர்த்தல்,

**இ. கட்டுமானத் தொழில்கள் :** கட்டிடங்கள், பாலங்கள், அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான (சிமெண்ட், செங்கல், கம்பி) பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை கட்டுமான தொழிற்சாலை ஆகும்.

## பகுதி II – கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடத்தை நிரப்புக - ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பொருட்கள் உற்பத்தியிலிருந்து நுகர்வு வரை நடைபெறும் அனைத்து செயல்பாடுகளையும் ............ எனலாம்.

**விடை : தொழில் நடவடிக்கைகள்**

2. முதன்மை உற்பத்தி தொழில்கள் .................. தொடர்புடையவை. **விடை : இயற்கையோடு**

3. வியாபாரம் மற்றும் வியாபாரத்தோடு தொடர்புடைய சில நடவடிக்கைகளை உள்ளடக்கியது ........ ஆகும்.

**விடை : வணிகம்**

4. பொருள்களை சேமித்து வைக்கவும் விலைகள் சீராக இருக்கவும் ............. உதவுகிறது.

**விடை : பண்டக காப்பகங்கள்**

**சரியான விடையை தெரிவு செய்க.**

**5. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றை தேர்வு செய்க.**

அ) முதன்மை உற்பத்தி தொழில் ஆ) இரண்டாம் நிலை உற்பத்தி தொழில்

இ) சேவை தொழில் ஈ) சிறு தொழில்கள்

**விடை : ஈ) சிறு தொழில்கள்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **கீழ்கண்டவற்றுள் சேவை தொழிலின் கீழ் வராததை தேர்வு செய்க.**

1) உணவகம் 2) கல்வி நிலையம் 3) காவல்நிலையம் 4) காடு வளர்ப்பு

அ) 1 மட்டும் ஆ) 1 மற்றும் 2 இ) 4 மட்டும் ஈ) 2 மற்றும் 3

**விடை : இ) 4 மட்டும்**

7. **பட்டியல் I ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப்பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையைத் தெரிவு செய்க :**

| | பட்டியல்-I | | பட்டியல்-II |
|---|---|---|---|
| i) | பகுப்பாய்வு உற்பத்தி தொழில் | - 1) | மருந்து, குளிர்பானம் |
| ii) | செயற்கை பொருள் உற்பத்தி தொழில் | - 2) | பெட்ரோல், டீசல் |
| iii) | தொடர்முறை உற்பத்தி தொழில் | - 3) | மகிழுந்து, தொலைக்காட்சி |
| iv) | ஒன்று திரட்டும் உற்பத்தி தொழில் | - 4) | நைலான், பாலியஸ்டர் தொகுப்பு : |

| **தொகுப்பு :** | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 2 | 4 | 1 | 3 |
| ஈ) | 1 | 3 | 4 | 2 |

**விடை : இ) 2 4 1 3**

8. **பட்டியல் I ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப்பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையைத் தெரிவு செய்க :**

| | பட்டியல்-I | | பட்டியல்-II |
|---|---|---|---|
| i) | பண்டகக் காப்பு | - 1) | தனித்திறன் சேவை |
| ii) | காப்பீடு | - 2) | தனித்துவ சேவை |
| iii) | சிறப்பு தொழில் | - 3) | நிதிச் சேவை |
| iv) | புது எண்ணத்தை உருவாக்குதல் | - 4) | விநியோகச் சேவை |

| **தொகுப்பு :** | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 1 | 4 |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 2 | 1 | 3 | 4 |
| ஈ) | 3 | 2 | 1 | 4 |

**விடை : ஆ) 4 3 2 1**

9. **பட்டியல் I ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப்பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையைத் தெரிவு செய்க :**

| | பட்டியல்-I | | பட்டியல்-II |
|---|---|---|---|
| i) | உருவப் பயன்பாடு | - 1) | வங்கி |
| ii) | இடப் பயன்பாடு | - 2) | உற்பத்தி தொழில் |
| iii) | உடமைப் பயன்பாடு | - 3) | வணிகம் |
| iv) | நிதிப் பயன்பாடு | - 4) | வியாபாரம் |

| **தொகுப்பு :** | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 4 | 1 | 3 | 2 |
| ஆ) | 2 | 3 | 1 | 4 |
| இ) | 3 | 2 | 4 | 1 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

**விடை : ஈ) 2 3 4 1**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**10. கீழ்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க.**

**கூற்று** (A) : வணிகத்தை உள்நாட்டு வணிகம், வெளிநாட்டு வணிகம் எனவும் வகைப்படுத்தலாம்.

**காரணம்** (R) : உள்நாட்டு வணிகத்தை மொத்த வணிகம், சில்லறை வணிகம் என்றும் வகைப்படுத்தலாம்.

அ) A மட்டும்

ஆ) A மட்டும் சரி

இ) A மற்றும் R சரி, R என்பது Aக்கு சரியான விளக்கம்

ஈ) A மற்றும் R சரி, R என்பது Aக்கு தவறான விளக்கம்

**விடை : ஈ) A மற்றும் R சரி, R என்பது Aக்கு தவறான விளக்கம்**

**11. வணிகம் என்பது .......... ன் கிளையே.**

அ) தொழில் படிப்பு ஆ) பொருளாதாரம்

இ) நிதியியல் மற்றும் சந்தையியல் ஈ) அரசியல் அறிவியல் **விடை : ஆ) பொருளாதாரம்**

**12. கீழ்க்கண்டவற்றுள் தவறான கருத்தினை தெரிவு செய்க.**

அ) இயற்கை வளங்களிலிருந்து கிடைக்கும் பொருட்களை தூய்மை செய்து விற்பது பிரித்தெடுக்கும் தொழிற்சாலை

ஆ) தாவரங்கள் விலங்குகளை மனித தேவைகளுக்காக வளர்ப்பது மரபுத் தொழிற்சாலை

இ) மூலப்பொருட்களை முடிவுற்ற பொருளாக மாற்றும் தொழிற்சாலை ஒன்று திரட்டும் தொழிற்சாலை

ஈ) காகிதங்கள், சர்க்கரை போன்றவற்றை தயாரிக்கும் தொழிற்சாலை கட்டுமான தொழிற்சாலை

**விடை : ஈ) காகிதங்கள், சர்க்கரை போன்றவற்றை தயாரிக்கும் தொழிற்சாலை கட்டுமான தொழிற்சாலை**

**13. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத இணையை தெரிவு செய்க.**

அ) பிரித்தெடுக்கும் தொழிற்சாலை - சுரங்கங்கள் ஆ) மரபு தொழிற்சாலை - காளான் வளர்ப்பு

இ) தொடர் தொழிற்சாலை - கச்சா எண்ணெய் ஈ) கட்டுமான தொழிற்சாலை - அணைகள்

**விடை : இ) தொடர் தொழிற்சாலை - கச்சா எண்ணெய்**

## II. குறுவிடை வினாக்கள் - இரண்டு மதிப்பெண்கள்

**1. வணிகம் என்றால் என்ன?**

➢ வியாபாரம் = வாங்கல் + விற்றல்

➢ வணிகம் = வியாபாரம் + துணைபுரியும் சாதனங்கள்


➢ துணைபுரியும் சாதனங்கள் = வியாபாரி, போக்குவரத்து, பண்டகக்காப்பு, வங்கி, காப்பீடு, விளம்பரம் போன்றவைகள்.

**2. வியாபாரத்திற்குத் துணைபுரிபவைகள் யாவை?**

போக்குவரத்து, பண்டகக்காப்பு, காப்பீடு, வங்கி

## III. சிறு விடை வினாக்கள் - மூன்று மதிப்பெண்கள்

**1. உற்பத்தித் தொழில் (சாலை)களின் வகைகள் யாவை?**






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. உற்பத்தி (அ) தயாரிப்புத் தொழில்கள் (தொழிற்சாலைகள்) வகைகள் யாவை?**

**தயாரிப்புத் தொழிற்சாலை :**

➢ மூலப்பொருட்களை அல்லது பாதி முடிவுற்றப் பொருட்களை முழு முடிவுற்றப் பொருளாக மாற்றும் தொழிற்சாலை தயாரிப்புத்தொழிற்சாலை ஆகும்.

**பகுப்பாய்வு (ஆராய்ச்சி) தொழிற்சாலை:**

➢ ஒரு மூலப்பொருளிலிருந்து பல்வேறு வகையானப் பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரிப்பதை மேற்கொள்ளும் தொழிற்சாலை பகுப்பாய்வு தொழிற்சாலை ஆகும்.

➢ (எ.கா) (கச்சா எண்ணெய், எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய்) (பால், தயிர், மோர், நெய், வெண்ணெய், பால்கோவா)

**செயற்கை (பொருள்) தொழிற்சாலை :**

➢ பல்வேறு வகையான கூட்டுப்பொருட்களை ஒன்றாகச் சேர்த்துப் புதிதாக ஒரு பொருளை உருவாக்கும் தொழிற்சாலை செயற்கைத் தொழிற்சாலை ஆகும்.

➢ பாலியஸ்டர் - நைலான்.

**தொடர் தொழிற்சாலை :**

➢ மூலப்பொருட்கள் (கச்சாப்பொருட்கள்) பல்வேறு படிநிலைகளைக் கடந்து இறுதியில் ஒரு முடிவுற்ற பொருளாக மாற்றுவது தொடர் தொழிற்சாலை ஆகும்.

➢ (எ.கா) குளிர்பானம் தயாரித்தல் - மருந்துகள் தயாரித்தல்

**ஒன்று திரட்டும் தொழிற்சாலை :**

➢ பல்வேறு பொருட்களை சேகரித்து, ஒன்றிணைத்து கடைசி நிலையில் முடிவுற்ற பொருளாக மாற்றும் தொழிற்சாலை ஒன்று திரட்டும் தொழிற்சாலை ஆகும்.

➢ மிதிவண்டி - கணிணி - உதிரி பாகங்கள்.

**கட்டுமானத் தொழிற்சாலை :** கட்டிடங்கள், பாலங்கள், அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான (சிமெண்ட், செங்கல், கம்பி பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை கட்டுமானத் தொழிற்சாலை ஆகும்.

**3. பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள் மற்றும் மரபுசார் உற்பத்தித் தொழில்களை வேறுபடுத்துக.** மார்ச்-2019

| எண் | தலைப்பு | பிரித்தெடுக்கும் | மரபுத் தொழிற்சாலை |
|---|---|---|---|
| 1 | பொருள் | இயற்கை வளங்களை (பொருட்களை பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் தொழிற்சாலை | நுகர்வோரின் உபயோகத்திற்காகச் சில தாவரங்கள், விலங்குகளை வளர்க்கும் தொழிற்சாலைகள் ஆகும். |
| 2 | நோக்கம் | பொருட்களைப் பிரித்தெடுத்து தூய்மைப்படுத்தி வகைகளாகப் பிரிப்பது. | இனப் பெருக்கத்திற்காக வளர்ப்பது. |
| 3 | எடுத்துக்காட்டு | மீன் பிடித்தல் | மீன் வளர்த்தல் |

**4. வணிகத்தின் சிறப்பியல்புகளை விவரி.** QY-2018 QY-2019 HY-2018

➢ எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையின் நோக்கமும் இலாபம் ஈட்டுவது ஆகும்.

➢ வணிகம் என்பது இலாபம் ஈட்டும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளோடும் தொடர்புடையது.

**பொருட்கள், சேவைகளின் பரிமாற்றம் :**

➢ வணிகம் என்பது இலாபத்திற்காகப் பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தை உள்ளடக்கியது.

➢ பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதன் நோக்கம் நுகர்வோருக்கு மறு விற்பனை செய்வதே ஆகும்.

**பயன் (இலாபம்) பெறும் நோக்கம்:**

➢ வணிகத்தின் நோக்கம் இலாபம் பெறுவதே.

➢ இலாப நோக்கல்லாது மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையும் வணிகம் ஆகாது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. வணிகத்தை எடுத்துக்காட்டுடன் குறிப்பு வரைக. .**

- ➢ தொடக்க உற்பத்தியாளரிடமிருந்து இறுதி நுகர்வோருக்குப் பொருட்கள் சென்றடையும் வரை நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளும் வணிகம் ஆகும்.
- ➢ வணிக நடவடிக்கைகள் பொருட்கள் வாங்குதலும், விற்றலும், முடிவுற்ற பொருட்கள் பரிமாற்றம் கொண்டதே வணிகம் - எவ்லின் தாமஸ்.
- ➢ வியாபாரத்தை உறுதுணைபுரியும் போக்குவரத்து பண்டகக்காப்பு, காப்பீடு, வங்கி, கட்டுமம் செய்தல், விற்பனை மேம்படுத்தல் போன்றவைகளை உள்ளடக்கியது வணிகம் ஆகும்.
- ➢ மதுரை மல்லிகை - சென்னையில் விற்பது
  சேலம் மாம்பழம் - மதுரையில் விற்பது
  காஷ்மீர் ஆப்பிள் - கன்னியாகுமரியில் விற்பது
  மதுரை மல்லிகை - சிங்கப்பூரிற்கு விற்பது

## IV. பெரு விடை வினாக்கள் - ஐந்து மதிப்பெண்கள்

**1. உற்பத்தித் தொழில்களின் வகைகளை அதன் அளவுகளின் அடிப்படையில் விவரி.**

**குறுந்தொழில்கள் :**

- ➢ இதற்கு மிக குறைந்த அளவு மூலதனமே தேவைப்படும்.
- ➢ ஒரு தனிநபர் தன்னிடமுள்ள சிறு முதலைக் கொண்டு தொழில் தொடங்கலாம்.
- ➢ (எ.கா) பெட்டிக்கடை அடுமனை

**சிறுதொழில்கள் :**

- ➢ குறுந்தொழில்களைக் காட்டிலும் சற்று அதிக அளவு மூலதனம் தேவைப்படும்.
- ➢ இதன் உரிமையாளர் சிலரை பணியாளர்களாக நியமித்துக் கொள்ளலாம்.
- ➢ பொதுவாக மக்கள் வசிக்கும் இடத்தில் இவைகள் தொடங்கப்படுகின்றன.

**நடுத்தரத் தொழில்கள் :**

- ➢ ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூட்டாகச் சேர்ந்து இவ்வகைத்தொழில்களைத் தொடங்கலாம்.
- ➢ ஒவ்வொரு கூட்டாளியும் முதலிடுவர். இதனால் கூடுதலான முதல் கிடைக்கும்.
- ➢ (எ.கா) கூட்டாண்மை நிறுவனம்.

**பேரளவுத் தொழில்கள் :**

- ➢ இது கூட்டுப் பங்கு நிறுமம் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது.
- ➢ இதற்கு பேரளவு மூலதனம் தேவை.
- ➢ இது பொதுமக்களுக்கு பங்குகள் வெளியிடுவதன் மூலம் மூலதனத்தைத்திரட்டுகின்றது.
- ➢ மொத்த முதல் சிறுசமஅலகுகளாக பங்குகள் பொதுமக்களுக்கு வெளியிடப்படுகிறது.
- ➢ இது பெரிய அளவில் செயல்படும் நிறுவனமாகும்.
- ➢ (எ.கா) துறைவாரி (அ) பல பிரிவு பண்டகசாலை.

**2. வணிகத்தின் சிறப்பியல்புகளை விவரி.**

- ➢ எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையின் நோக்கமும் இலாபம் ஈட்டுவது ஆகும்.
- ➢ வணிகம் என்பது இலாபம் ஈட்டும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளோடும் தொடர்புடையது.

**பொருட்கள், சேவைகளின் பரிமாற்றம் :**

- ➢ வணிகம் என்பது இலாபத்திற்காகப் பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தை உள்ளடக்கியது.
- ➢ பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதன் நோக்கம் நுகர்வோருக்கு மறு விற்பனை செய்வதே ஆகும்.

**பயன் (இலாபம்) பெறும் நோக்கம்:**

- ➢ வணிகத்தின் நோக்கம் இலாபம் பெறுவதே.
- ➢ இலாப நோக்கல்லாது மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையும் வணிகம் ஆகாது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**பயன்பாடுகளைத் தோற்றுவித்தல் :**

➢ மூலப்பொருட்களை முடிவுப்பொருட்களாக மாற்றுவது - உருவப்பயன்பாடு

➢ பொருட்களைப் போக்குவரத்து செய்வதன் மூலம் - இடப்பயன்பாடு

➢ பொருட்களைப் பண்டகக் காப்பில் இட்டுவைக்கும் போது - காலப் பயன்பாடு உருவாக்கப்படுகிறது.

**வணிக நடவடிக்கைகளின் ஒழுங்கு:**

➢ வணிக நடவடிக்கைகள் எப்போதும் தொடர்ந்து நடைபெறுவதாக இருக்க வேண்டும். இதில் மாறுபட்ட (அ) வேறுபட்ட நடவடிக்கைகள் இடம் பெறக்கூடாது.

3. **வணிகத்திற்கு உறுதுணையானவற்றைச் சுருக்கமாக விவரி.**

**வியாபாரம் :**

➢ வியாபாரம் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குதல், விற்றல் செயல்களை உள்ளடக்கியதாகும்.

➢ வியாபாரம் - உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம் என இருவகைப்படும்.

➢ உள்நாட்டு வியாபாரம் - மொத்த வியாபாரம், சில்லரை வியாபாரம் என இருவகைப்படும். வெளிநாட்டு வியாபாரம் - ஏற்றுமதி, இறக்குமதி, மறுஏற்றுமதி என மூன்று வகைப்படும்.

**போக்குவரத்து:**

➢ உற்பத்தி செய்த பொருட்கள் அனைத்தையும் உற்பத்தி செய்த பகுதிகளிலேயே விற்பது அரிது.

➢ அவற்றை நாட்டின் (அ) உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுகர்வோருக்குக் கொண்டு சேர்க்கும் பணியைச் செய்வதுபோக்குவரத்து நிலம், நீர், வான்) ஆகும்.

➢ உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை நுகர்வோருக்கு நகர்த்தும் ஊடகமாகப் போக்குவரத்து விளங்குகிறது.

**பண்டகக்காப்பு:**

➢ பொருட்கள் உற்பத்தி செய்வது ஒரு காலம். அது நுகரப்படுவது வேறொரு காலம்.

➢ குடை மழையங்கி - ஆண்டு முழுவதும் உற்பத்தி - செய்யப்படுகிறது. ஆனால் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் தேவைப்படுகிறது.

➢ பொருட்கள் தேவைப்படும் நேரத்தில் அவைகள் கிடைப்பதற்கு ஏற்றவாறு பண்டகங்களில் இருப்பு வைக்க உதவுவது பண்டகக்காப்பகம் ஆகும்.

**வங்கி :**

➢ வங்கிகளின் உதவியின்றி எந்த தொழில் அமைப்பும் இயங்க முடியாத அளவிற்கு வங்கிச் சேவை மகத்துவம் பெற்று விளங்குகிறது.

➢ ஒருதொழில் அமைப்பிற்கு குருதி ஓட்டமாக வங்கிகள் விளங்குகின்றன.

➢ பணத்தை வைப்புகள் மூலம் பெறுவதுடன் தொழிலமைப்புக்களுக்கு பல்வேறு கடன்கள் வழங்குகின்றன.

**காப்பீடு :**

➢ வியாபாரம் முழுக்க முழுக்க இடர்பாடு செறிந்த செயலாகும்.
தொழில் அமைப்புகள் இடர் எனும் கடலில் நீந்திச் செல்லும் கப்பல்கள் ஆகும்.

➢ எதிர்பாராத நிகழ்வுகளால் ஏற்படும் நட்டங்களுக்கு காப்பீட்டு நிறுவனம் ஈட்டுறுதி அளிக்கிறது.

➢ இதற்காக தொழில் அமைப்புகள் காப்பீட்டு நிறுவனங்களுக்கு கால அடிப்படையில் முனைமம் செலுத்த வேண்டும்.

****** ********* ******
****



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# அலகு 3 சேவைத் தொழில்கள் – 1

(அத்தியாயம் - 10)

# இந்திய ரிசர்வ் வங்கி

## பகுதி – I. புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. **ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது** ஜூன்-2019 செப்-2021
   அ) மைய வங்கி ஆ) வணிக வங்கி
   இ) கூட்டுறவு வங்கிகள் ஈ) வெளிநாட்டு வங்கிகள்
   **விடை: அ) மைய வங்கி**

2. **இந்திய மைய வங்கி என்பது?** மார்ச்-2020
   அ) பி.என்.பி ஆ) எஸ்.பி.ஐ இ) ஐ.சி.ஐ.சி.ஐ ஈ) ஆர்.பி.ஐ
   **விடை: ஆ) ஆர்.பி.ஐ.**

3. **இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1,........... ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.** Qy & Hy-2018
   அ) 1936 ஆ) 1935 இ) 1934 ஈ) 1933 செப்-20 மார்ச்-23
   **விடை: ஆ) 1935**

4. **வங்கியர்கள் பணத்தை கையாள்பவர்கள் மட்டுமல்ல ........ க்கு வழிகாட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள்.**
   அ) பொருளாதார வளர்ச்சி ஆ) வர்த்தக வளர்ச்சி
   இ) தொழில் வளர்ச்சி ஈ) சேவை வளர்ச்சி
   **விடை: அ) பொருளாதார வளர்ச்சி**

5. **கீழ்க்கண்டவற்றில் எது மைய வங்கியின் பணி அல்ல?**
   அ) ஒரு நாட்டின் வங்கி அமைப்புகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் வங்கி அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துதல்
   ஆ) பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுதல்
   இ) அரசாங்க வங்கியாளராக நடத்தல்
   ஈ) மற்ற வங்கிகளின் வைப்பு கணக்குகளைப் பராமரித்தல்
   **விடை: ஆ) பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளுதல்**

### II. குறுவிடை வினாக்கள்

1. **சேவை தொழில்களில் உள்ள சேவைகள் யாவை?**
   - கல்வி, மருத்துவம், சுகாதாரம்
   - வங்கி
   - போக்குவரத்து
   - காப்பீடு
   - தொலைத்தொடர்பு
   - பண்டகச்காப்பு
   - விளம்பரம்

2. **வங்கியின் வரைவிலக்கணம் யாது?**
   வங்கி இலக்கணம்
   1949 ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, முதலீடு செய்வதற்கோ, கடன் வழங்குவதற்கோ கேட்ட உடன் அல்லது காசோலை, வரைவோலை அல்லது பணவிடை மற்றுமுள்ள முறைகளில் திரும்பக் கொடுப்பதற்கோ பொது மக்களிடமிருந்து வைப்பு தொகைகளைப் பெற்றுக் கொள்ளும் செயல் வங்கியியல் எனப்படும். அப்பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம் வங்கி ஆகும் என வரைவிலக்கணம் கூறுகிறது.

3. **மைய வங்கி பற்றிச் சுருக்கமாக விளக்குக.** Qy-2018 & 2019 Hy-2018
   i) மைய வங்கி என்பது நாட்டின் அரசாங்கத்திற்குச் சொந்தமானது (அரசின் வங்கி)
   ii) நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளுக்கும் உச்சநிலையில் இருந்து செயல்படுகிறது. வங்கிகளின் வங்கி)
   iii) அந்தந்த நாட்டிற்கானச் சட்டப்பூர்வமான பணத்தை வெளியிடும் முற்றுரிமை கொண்டது.
   எ.கா: இந்தியா - இந்திய ரிசர்வ் வங்கி
   iv) அமெரிக்கா - ஃபெடரல் ரிசர்வ் வங்கி. எ.கா: இங்கிலாந்து - பாங்க் ஆப் இங்கிலாந்து



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. சிறுவிடை வினாக்கள்

**1. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை? (ஏதேனும் 3)**

1. தலைமை மற்றும் மேற்பார்வையாளர்
2. பாரம்பரியப் பணிகள்
3. மேம்பாட்டு பணிகள்

**2. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றிக் கூறுக.**

➢ இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா பண வெளியீடு மற்றும் மைய வங்கிக்கான பிற கடமைகளை ஆற்றி வந்தது.

➢ ஹில்டன்- யங் ஆணையம் (அ) இந்திய நாணயம் மற்றும் நிதியியல் தொடர்பான இராயல் ஆணையம் (I.Mகீன்ஸ்சர் என்ஸைட் கேபிள்) ஒருமையவங்கியை உருவாக்கப் பரிந்துரைத்தது.

➢ அதன் விளைவாக இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934ல் உருவாக்கப்பட்டு இந்திய ரிசர்வ் வங்கி 1.4.1935 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.

➢ இந்திய ரிசர்வ் வங்கியின் ரூ.5 கோடி மூலதனம் ரூபாய் நூறு மதிப்புள்ள, முற்றிலும் செலுத்தப்பட்ட - பங்குகளால் உருவாக்கப்பட்டது.

➢ சுதந்திரம் அடைந்த பிறகு மைய அரசு இந்திய ரிசர்வ் வங்கிச்சட்டம் 1948ல் நிறைவேற்றியது.

➢ 1.1.1949 முதல் இந்திய ரிசர்வ் வங்கி அரசுடைமையாக்கப்பட்டு அரசுக்குச் சொந்தமான வங்கியாக செயல்பட்டு வருகிறது.

➢ இந்திய ரிசர்வ் வங்கி 1947வரை பர்மா நாட்டிற்கும், ஜீன் 1948 வரை பாகிஸ்தான் நாட்டிற்கும் மைய வங்கியாகச் செயல்பட்டது.

**3. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?** Qy 18 ஆகஸ்ட் 22 மார்ச் 23

➢ இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் கீழ்க்காணும் நபர்கள் ஈடுபடுகின்றனர்.

➢ வாரியத்தின் 21உறுப்பினர்கள் மைய அரசால் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் பற்றிய விபரம்

➢ ஒரு ஆளுநர் - 4 துணை நிலை ஆளுநர்கள் - பதவிக்காலம் 4 ஆண்டுகள் பல்வேறு துறைகளிலிருந்து 10 இயக்குநர்கள்

➢ 2 அரசு அதிகாரிகள்

➢ 4 இயக்குநர்கள் (ஒவ்வொரு வட்டாரவாரியங்களிலிருந்தும் ஒருவர்)

## IV. பெருவிடை வினாக்கள்

**1. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (ஏதேனும் 5)** Qy-2018 & 2019 GMQ 2019 மார்ச்-2020

**1. தலைமை மற்றும் மேற்பார்வைப் பணிகள் :**

1. உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி .
2. இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்
3. பணவியல் உச்சநிலை அதிகாரி.
4. பொருளாதார அளவுருக்களைக் கூர்ந்து கண்காணித்தல்.
5. புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது.

**2. பாரம்பரிய பணிகள் :**

1. அரசின் வங்கிகள் மற்றும் நிதி ஆலோசகர்.
2. சட்டப்பூர்வமான பணம் வெளியிடுவதில் முற்றுரிமை
3. வங்கியர்களின் வங்கி 4. கடன் கட்டுப்பாட்டாளர்
5. இறுதி நிலைக்கடனீவோர்
6. தீர்வகப்பணி
7. அந்நியச் செலாவணியின் பாதுகாவலர்.
8. தகவல் சேகரிப்பு மற்றும் வெளியீடு

**3. மேம்பாட்டுப் பணிகள்:**

1, பொதுமக்களிடையே வங்கிச் சேவையை வளர்ப்பது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2, குறை தீர்வு நடவடிக்கைகள்
3, வேளாண்மை வளர்ச்சி
4. சிறுதொழில்களை ஊக்குவித்தல்
5. வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்தல்
6. கூட்டுறவுத்துறையினரை ஆதரித்தல்.

**2. இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்பு பற்றி விரிவாக விளக்குக.**

➢ இந்திய ரிசர்வ்வங்கியின் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது.
➢ இதில் 2017 ஆம் ஆண்டு முதல் 33 துறைகளைக் கொண்டுள்ளது.
➢ நான்கு மண்டல அலுவலகங்கள் மும்பை, டில்லி, கொல்கத்தாமற்றும் சென்னையில் உள்ளது.
➢ மண்டல அலுவலகங்கள் துணை நிலை ஆளுநர்களின் தலைமையில் வாரியங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன.
➢ 19 பிராந்திய அலுவலகங்களும், 11 துணை அலுவலகங்களும் மத்திய இயக்குநர்கள் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது.
➢ வாரியத்தின் 21 உறுப்பினர்கள் மைய அரசால் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் பற்றிய விபரம் பின்வருமாறு
➢ ஒரு ஆளுநர் - 4 (நான்கு) துணைநிலை ஆளுநர்கள் - பதவிக்காலம் 4 ஆண்டுகள்.
➢ பல்வேறு துறைகளிலிருந்து 10 இயக்குநர்கள்
➢ இரண்டு அரசு அதிகாரிகள்
➢ நான்கு இயக்குநர்கள் ஒவ்வொரு வட்டார வாரியங்களிலிருந்தும் ஒருவர்)

## பகுதி – II. கூடுதல் வினாக்கள்

## I. ஒரு மதிப்பெண் வினாக்கள்

### கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ............ நாள் முதல் இந்திய ரிசர்வ் வங்கி அரசுக்கு சொந்தமான மைய வங்கியாக செயல்பட்டு வருகிறது.

**விடை : ஜனவரி1, 1949**

2. ஒரு ரூபாய் நோட்டு மற்றும் அனைத்து நாணயங்களையும்.......... தயாரித்து வெளியிடுகிறது.

**விடை : நிதி அமைச்சகம்**

### சரியான விடையை தேர்ந்தெடுக்க :

**3. இந்திய அரசு ரூபாய் குறியீடு ரூ. என்பதிலிருந்து ₹ஆக மாற்றம் செய்த ஆண்டு**

அ) ஜூலை 15,2010 ஆ) ஜூலை 15, 2011 இ) ஜூலை 15,2009 ஈ) ஜூலை 15, 2012

**விடை : அ) ஜூலை 15, 2010**

**4. வங்கி ஒழுங்குமுறை சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு**

அ) 1939 ஆ) 1839 இ) 1949 ஈ) 1849

**விடை : இ) 1949**

**5. 1937 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கியின் தலைமையகம் கொல்கத்தாவிலிருந்து.......... க்கு மாற்றப்பட்டது.**

அ) சென்னை ஆ) டெல்லி இ) மும்பை ஈ) பெங்களூரு

**விடை : இ) மும்பை**

**6. ஒட்டுமொத்த கூட்டு உற்பத்தியில் சேவைத் தொழிலின் பங்களிப்பில் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க**

அ) கூட்டு உற்பத்தி - மூன்றில் ஒரு பங்கு
ஆ) உலக வேலைவாய்ப்பு - சமபங்கு
இ) உலக வர்த்தகம் - ஐந்தில் ஒரு பங்கு
ஈ) அந்நிய நேரடி முதலீடு - ஒரு பங்கு

**விடை: ஈ) அந்நிய நேரடி முதலீடு - ஒரு பங்கு**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. **கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத இணையை தேர்ந்தெடுக்க:**

அ) ஹில்டன் -யங்- ஆணையம் - மைய வங்கி உருவாக பரிந்துரை செய்தது

ஆ) வங்கியியல் தீர்வு பேசல் குழு - நல்லிணம், நிலைத்தன்மையை பராமரிப்பதற்காக உருவாக்கப்பட்டது.

இ) இரங்கராஜன் குழு - வங்கியில் கட்டமைப்பை ஒழுங்குபடுத்த உருவாக்கியது.

ஈ) கோபாலகிருஷ்ணன் குழு - புதிய சவால்களுக்கு உடனடியாக பதிலளிப்பது.

**விடை : இ) இரங்கராஜன் குழு - வங்கியில் கட்டமைப்பை ஒழுங்குபடுத்த உருவாக்கியது**

**பொருத்துக:**

8. **பட்டியல் I ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப்பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையைத் தெரிவு செய்க :**

| | **பட்டியல்-I** | | **பட்டியல்-II** |
|---|---|---|---|
| i) | இந்தியா முதல் வங்கி | - 1) | இம்பிரியல் வங்கி |
| ii) | முதல் கூட்டு பங்கு வங்கி | - 2) | இந்துஸ்தான் வங்கி |
| iii) | சென்னை, மும்பை, கொல்கத்தா வங்கி ஒருங்கிணைப்பு | - 3) | கொல்கத்தா |
| iv) | அரசுடமையாக்கப்பட்ட இம்பீரியல் வங்கி | - 4) | ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா |

| **தொகுப்பு :** | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 1 | 4 |
| ஆ) | 4 | 1 | 3 | 2 |
| இ) | 4 | 1 | 2 | 3 |
| ஈ) | 3 | 2 | 1 | 4 |

**விடை : அ) 2 3 1 4**

9. **பட்டியல் I ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப்பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையைத் தெரிவு செய்க :**

| | **பட்டியல்-I** | | **பட்டியல்-II** |
|---|---|---|---|
| i) | இந்துஸ்தான் வங்கி | - 1) | 1955 ஜூலை 1 |
| ii) | கொல்கத்தா வங்கி | - 2) | 1921 ஜனவரி 27 |
| iii) | இம்பீரியல் வங்கி | - 3) | 1786-1791 |
| iv) | ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா | - 4) | 1770-1932 |

| **தொகுப்பு :** | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 1 | 2 | 4 | 3 |
| ஈ) | 4 | 3 | 1 | 2 |

**விடை : ஆ) 4 3 2 1**

10. **பட்டியல் I ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப்பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையைத் தெரிவு செய்க :**

| | **பட்டியல்-I** | | **பட்டியல்-II** |
|---|---|---|---|
| i) | வங்கி வீதக் கொள்கை | - 1) | வங்கிகளிடம் இருக்க வேண்டிய பணவிகிதம் |
| ii) | ரொக்க இருப்பு விகிதம் | - 2) | கடன் வழங்கும் கழிவு விகிதம் |
| iii) | சட்ட ரீதியான நீர்மைத்தன்மை விகிதம் | - 3) | பணப்பழக்க கட்டுப்பாடு |
| iv) | திறந்த சந்தை செயல்பாடுகள் | - 4) | வங்கிகள் மத்திய வங்கியில் வைத்துள்ள பண இருப்பு விகிதம் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| **தொகுப்பு :** | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 2 | 4 | 3 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 2 | 4 | 1 | 3 |

**விடை : ஆ) 2 4 1 3**

**கீழ்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க.**

11. **கூற்று** (A) : இந்திய ரிசர்வ் வங்கி மற்ற வங்கிகளுக்கு இறுதிநிலை கடன் ஈவேராக செயல்படுகிறது.
**காரணம்** (R) : கடன் பெறும் பிற ஆதாரங்கள் தீர்ந்துவிட்ட நிலையில் அனைத்து வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெற முடியும்.
அ) A மற்றும் R சரி, மேலும் R என்பது Aக்கு தவறான விளக்கம்
ஆ) A சரி, ஆனால் R தவறு
இ) A தவறு, ஆனால் R சரி
ஈ) A மற்றும் R சரி, மேலும் R என்பது Aக்கு சரியான விளக்கமல்ல

**விடை : அ) A மற்றும் R சரி, மேலும் R என்பது Aக்கு சரியான விளக்கம்**

12. **இந்திய ரிசர்வ்வங்கி எத்தனை கிளைகளைக் கொண்டுள்ளது**
அ) 4 ஆ) 5 இ) 6 ஈ) 7

**விடை : அ) 4**

13. **ஆயுத் வங்கி 1894 ஆம் ஆண்டிற்கு பிறகு எவ்வாறு அழைக்கப்பட்டது**
அ) இம்பிரியல் வங்கி ஆ) பாரத ஸ்டேட் வங்கி
இ) பஞ்சாப் நேஷனல் வங்கி ஈ) பரோடா வங்கி **விடை : இ) பஞ்சாப் நேஷனல் வங்கி**

## II. குறுவிடை வினாக்கள் - இரண்டு மதிப்பெண்கள்

1. **வங்கி - இலக்கணம் வரையறு.**

➢ "முதலீடு செய்வதற்கோ, கடன் வழங்குவதற்கோ கேட்ட உடன் அல்லது காசோலை வரைவோலை அல்லது பணவிடை மற்றுமுள்ள முறைகளில் திரும்பக் கொடுப்பதற்கோ மற்றுமுள்ள முறைகளில் திரும்பக் கொடுப்பதற்கோ பொதுமக்களிடமிருந்து வைப்பு தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் செயல் வங்கியியல் எனப்படும்.
➢ வங்கி ஒழுங்காற்றுச்சட்டம் 1949ஆகும்.

2. **பண்டைய இந்தியாவில் வங்கி குறிப்பு வரைக.**

➢ இந்தியாவில் 3500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வங்கி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.
➢ வேதகாலத்தில் கடும் வட்டி (அநியாயவட்டி) சம்பாதித்தல் இருந்துள்ளது.
➢ 1200 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் கீழ்வரும் சொற்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன.
➢ பற்று, வரவு, செலவு, இலாபம், நட்டம் இவை அனைத்தும் ஐந்தொகை என அழைக்கப்பட்டது.

3. **கடன் அளவைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை?**

➢ வங்கி வீதக் கொள்கை ➢ ரொக்க இருப்பு விகிதம்
➢ நீர்மைத்தன்மை விகிதம் ➢ திறந்த சந்தை செயற்பாடுகள்

4. **கடன் தரத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை?**

➢ கடன் பங்கீடு ➢ விளிம்புத் தேவைகள்
➢ நேரடி நடவடிக்கை ➢ ஒழுக்க நடவடிக்கை

5. **இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை?**

➢ தலைமைமற்றும் மேற்பார்வைப்பணிகள் ➢ பாரம்பரியப் பணிகள் ➢ மேம்பாட்டுப் பணிகள்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. சிறு விடை வினாக்கள் - மூன்று மதிப்பெண்கள்

**1. வங்கி சேவைகளின் முக்கியத்துவத்தைத் குறிப்பிடுக.** Qy 2019

➢ ஒரு நாட்டின் வர்த்தகம், வணிகம் மற்றும் தொழில்களின் நரம்பு மண்டலமாக வங்கி கருதப்படுகிறது.
➢ நாட்டின் வழக்கமான செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டுக்கான பணத்தேவைகளைச் சந்திப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
➢ பொதுவாக வங்கி என்றால் அது வணிக வங்கியையே குறிக்கும்.
➢ பல்வேறுவகையான சேவைகளை வழங்கும் பல்வேறு வங்கிகள் உள்ளன.
➢ மைய வங்கி அவற்றில் முக்கியமான ஒன்றாகும்.

## IV. பெரு விடை வினாக்கள் - ஐந்து மதிப்பெண்கள்

**1. இந்திய ரிசர்வ் வங்கியின் பாரம்பரியப் பணிகள் யாவை** செப்-2021

**அரசின் வங்கி :**

**அமைப்பது எளிது :** நிறுமச்சட்டத்தின் படி அரசு முடிவெடுத்த அரசு நிறுமங்களை எளிதில் அமைக்கலாம்.
➢ இந்திய ரிசர்வ் வங்கிமைய, மாநில அரசுகளின் வங்கியாகவும், நிதி ஆலோசகராகவும் செயலாற்றுகிறது.
➢ அரசுகளின் சார்பாக பணம் பெறுதல் மற்றும் செலுத்தல்.
➢ மைய அரசின்பொதுக்கடனை நிர்வகித்தல்.

**பணம் வெளியிடுதல்:**

➢ சட்டப்பூர்வமான பணமாகிய ரூபாய் நோட்டுக்களை வெளியிடும் முற்றுரிமை இந்திய ரிசர்வ் வங்கி பெற்றிருக்கிறது.
➢ ஒருரூபாய் நோட்டுத் தவிர அனைத்து மதிப்பிலான ரூபாய் நோட்டுக்களை இது வெளியீடுகிறது.
➢ ஒருரூபாய் நோட்டு மட்டும் நிதித்துறைச் செயலரால் கையொப்பமிட்டு வெளியிடப்படுகிறது.

**வங்கிகளின் வங்கி :**

➢ நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளுக்கு தலைமை வங்கியாக இது செயல்படுகிறது.
➢ அனைத்து அட்டவணையிடப்பட்ட வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியில் ஒரு குறிப்பிட்ட சதவிகித ரொக்கம் வைத்திருக்க வேண்டும்.
➢ அனைத்து வங்கிகளும் நெருக்கடியான காலங்களில் தகுதியான மாற்று ஆவணங்களை மறுவட்டம் செய்து இந்தியரிசர்வ் வங்கியிடம் நிதி வசதி பெறலாம்.

**தீர்வகப்பணி :**

➢ வணிக வங்கிகள் தங்களுக்குள் கொடுக்க வேண்டிய கடன்களை எளிதில் தீர்த்துக் கொள்ள 860 தீர்வாகங்களின் மூலம் இப்பணியை மேற்கொள்கிறது.
➢ இந்திய ரிசர்வ் வங்கி 14, பாரத ஸ்டேட் வங்கி 840, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் 6, தீர்வாகங்களின் மூலம் தீர்வாகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அந்நியச் செலாவணியின் பாதுகாவலர் :**

இந்திய ரிசர்வ் வங்கி பன்னாட்டு பண நிதியகத்தின் உறுப்பினராக இருக்கும் காரணத்தினால், இவ்வமைப்பின் ஏனைய உறுப்பு நாடுகளின் நாணயத்திற்கு நிலையான (ரூபாய்) மாற்று வீதத்தை இது வைத்திருத்தல் அவசியம்.
➢ எனவே அரசு நிர்ணயித்த வீதத்தில் அந்நியச் செலாவணிகளை வாங்கவும், விற்கவும் செய்கிறது.

**2. கடன் அளவைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை?**

➢ இந்தியப் பொருளாதாரத்தின் மொத்தக் கடன் தொகை அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள் (பணச் சுழற்சி அளவைக்குறைக்க) கடன் அளவைக் கட்டுப்படுத்தும் காரணிகளாகும்.

**வங்கி வீதம் கொள்கை :**

➢ வங்கி வீதம் என்பது இந்திய ரிசர்வ் வங்கியால் , பிற வங்கிகளுக்கு மாற்றுச்சீட்டுக்களை வட்டம் மற்றும் மறு வட்டம் செய்து கடன் வழங்கும் கழிவு வீதத்தைக் குறிக்கும்.
➢ பணவீக்க காலத்தில் வங்கி வீதம் அதிகரிக்கப்படுகிறது.
➢ பணவாட்டத்தின் போது வங்கி வீதம் குறைக்கப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ரொக்க இருப்பு வீதம் :**

➢ ஒவ்வொரு வணிக வங்கியும் தன்னிடமுள்ள மொத்த இட்டு வைப்புகளின் (கால மற்றும் கேட்பு வைப்பு அளவைப் பொறுத்து குறைந்தபட்ச ரொக்க இருப்பை இந்திய ரிசர்வ் வங்கியிடம் இட்டு வைத்திருக்க வேண்டும்.

➢ பணவீக்க காலத்தில் இவ்விகிதம் அதிகரிக்கப்படுகிறது.

➢ பணவாட்டத்தின் போது இவ்விகிதம் குறைக்கப்படுகிறது.

**சட்ட ரீதியான நீர்மைத்தன்மை விகிதம்:**

➢ ஒவ்வொரு வணிக வங்கியும் தன்னிடமுள்ள மொத்த இட்டு வைப்புகளின் (கால மற்றும் கேட்பு வைப்பு) அளவை பொறுத்து தம்மிடமேவைத்துக்கொள்ள வேண்டிய பணம் மற்றும் பணத்திற்குச் சமமான உபகரணங்கள் ஆகியவைகளின் அளவைக் குறிக்கும்.

**திறந்த சந்தை செயற்பாடுகள்:**

➢ இந்திய ரிசர்வ் வங்கி நேரடியாக வெளி அங்காடிகளில் அரசுப் பத்திரங்களை வாங்குதலும், விற்றலும் வெளி அங்காடி நடவடிக்கைகள் எனப்படுகின்றன.

➢ பணவீக்கத்தின் போது இந்திய ரிசர்வ் வங்கி பத்திரங்களைவிற்கிறது.

பணவாட்டத்தின் போது இந்திய ரிசர்வ் வங்கி பத்திரங்களைவாங்குகிறது.

---

**3. கடன் தரத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை?**

**கடன் பங்கீடு :**

➢ இந்திய ரிசர்வ் வங்கி குறிப்பிட்ட நோக்கங்களுக்காக, வணிக வங்கிகளுக்குக் கொடுக்கும் கடன் மற்றும் முன்பணங்களின் அளவிற்கு ஒரு உச்சவரம்பை நிர்ணயிக்கிறது.

**விளிம்புத்தேவைகள் (வரம்பு குறித்தல்)**

➢ பிணையாகச் சமர்பிக்கப்படும் சொத்துக்களின் மதிப்பில் எந்த அளவு கழித்து, மீதித் தொகையைக் கடனாக வழங்கலாம் என்ற விதியைக் குறிக்கிறது.

**நேரடி நடவடிக்கை :**

வங்கிக் கடனின் அளவை நெறிப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அவ்வப்போது வழிகாட்டு ஆணைகளை வெளியிடுகிறது.

➢ இவ்வாணைகள் வாய்மொழியாகவோ, வேண்டுகோளாகவோ எச்சரிக்கையாகவோ இருக்கலாம்.

**ஒழுக்க நடவடிக்கை :**

➢ இந்திய ரிசர்வ் வங்கி சில குறிப்பிட்ட காலக்கடன்களைத் தாராளமாகவோ (அ) கட்டுப்படுத்தியோ வழங்க வங்கிகளுக்கு அழுத்தம் கொடுக்கிறது.

---

**4. இந்திய ரிசர்வ்வங்கியில் மேம்பாட்டு மற்றும் வளர்ச்சி பணிகள் யாவை?**

**பொதுமக்களிடையேவங்கிச் சேவையை வளர்ப்பது :**

➢ வங்கி முறையின் மீது பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணிகாப்பது இந்திய ரிசர்வ் வங்கியின் பொறுப்பாகும்.

➢ குறைந்த செலவில் வங்கிச் சேவையை பெறுதல், வாடிக்கையாளர்களின் வைப்புகளைப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் பொதுமக்கள் வங்கிச் சேவையைப் பயன்படுத்தத் தூண்டுகிறது.

**குறை தீர்வு நடவடிக்கை :**

➢ இந்திய ரிசர்வ் வங்கி, வாடிக்கையாளர்களின் குறைகள், புகார்களைத் தீர்ப்பதற்காக வங்கிக் குறை தீர்ப்பாளர் திட்டம் அறிமுகப்படுத்தி உள்ளது.

➢ இருபது மாநிலத் தலைநகரங்களில் 20 வங்கிக் குறை தீர்ப்பாளர் ஆணையர்களை நியமித்து, புகார்களை விரைவாகத் தீர்க்கப்படுகிறது.

**வேளாண் வளர்ச்சி :**

➢ இந்திய ரிசர்வ் வங்கியும், பிற வணிக வங்கிகளும், முன்னுரிமைத் துறையான வேளாண்துறைக்குத் தாங்கள் வழங்கும் கடன்களில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்குகிறது.

➢ விவசாயத்தை மேம்படுத்த நபார்டுடன் இணைந்து செயல்படுகிறது.

**வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்தல் :**

➢ ஏற்றுமதிக்கான கடன் விதிமுறைகளை எளிதாக்கி, ஏற்றுமதியாளர்கள் நீண்டக்காலக் கடன் பெற உதவுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**சிறிய அளவிலான தொழிற்சாலைகள் ஊக்குவித்தல் :**

➢ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு வங்கிகள் சிறப்புக் கிளைகளைத் தொடங்கி நிதி உதவி அளித்து அதன் வளர்ச்சிக்கு உதவுகிறது.

5. **இந்தியாவில் ரிசர்வ்வங்கியின் தலைமை மற்றும் மேற்பார்வைப்பணிகள் யாவை?** மார்ச்-2020

**உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி :**

➢ சர்வதேச வங்கியியல் தர நிலைகளுக்கிணங்க, நல்லிணக்கம் மற்றும் நிலைத் தன்மையைப் பராமரிக்க, இந்திய ரிசர்வ் வங்கி, சுவிட்சர்லாந்து பேசல் வங்கியல் மேற்பார்வைக் குழுவுடன் இணைந்து செயல்படுகிறது.

➢ உலக வங்கி பன்னாட்டு நாணய நிதியத்தில் இந்தியாவின் பிரதிநிதியாகவும் இருந்து வருகிறது.

**இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் :**

➢ வங்கிகளின் ஒழுங்குமுறைச் சட்டம் 1949 ன் கீழ் இந்தியாவில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குப்படுத்த கட்டுப்படுத்த, உரிமம் வழுங்க, மேற்பார்வை செய்ய இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

**பணவியல் உச்ச நிலை அதிகாரி :**

➢ நாட்டின் பணவியல் கொள்கை, விலைவாசி நிலைத்தன்மை, பணவீக்கம், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல், சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்ற அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

**பொருளாதார அளவுருக்களைக் கூர்ந்து கண்காணித்தல் :**

➢ பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்களான வேலைவாய்ப்பு , விலைவாசி , உற்பத்தி அளவு, வர்த்தகச் சுழற்சிகள், அயல்நாட்டு முதலீட்டு உள்ளீடுகள், செலுத்தல் சமநிலை போன்றவைகளைக் கூர்ந்து கண்காணித்து வருகிறது.

**புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது:**

➢ புதிய சவால்கள் எழுந்தால், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி ஆய்வு செய்து, தலைமைச் சுற்றறிக்கைகள் வெளியிட்டு விரைவாக பதிலளிக்கிறது.

6. **இந்திய வங்கிகளின் வரலாற்றுப் பின்னணியை விளக்குக.**

➢ இந்தியாவின் முதல் வங்கியாக ஹிந்துஸ்தான் வங்கி 1770 ம் ஆண்டு நிறுவப்பட்டு 1932 ஆம் ஆண்டில் மூடப்பட்டது.

➢ இந்தியப் பொதுவுடைமைவங்கி 1786ம் ஆண்டு நிறுவப்பட்டு 1791ம் ஆண்டுகலைக்கப்பட்டது.

➢ முதல் கூட்டுப் பங்கு வங்கியான கல்கத்தா வங்கி 1806ம் ஆண்டு நிறுவப்பட்டு,

➢ 1809 ம் ஆண்டு பெங்கால் வங்கி எனப்பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

➢ 1804ம் ஆண்டு மும்பைவங்கி மற்றும் 1843ஆம் ஆண்டு சென்னைவங்கி நிறுவப்பட்டன.

➢ இம் மூன்று வங்கிகள் (பெங்கால், மும்பை மற்றும் சென்னை) 1921 ம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்டு இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா என்ற வங்கி உருவாக்கப்பட்டது

➢ 1.7.1955 அன்று பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டு இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவை அரசுடைமையாக்கிஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா உருவாக்கப்பட்டது.

***** ******** *****

***



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அலகு 7

(அத்தியாயம் - 24)

# சில்லறை வியாபாரம் செய்தல்

## பகுதி - I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. சில்லறை வியாபாரிகள் .................... அளவில் பொருட்களை வைத்திருப்பர்.** மார்ச் - 2019 செப் - 2020

அ) சிறிய ஆ) பெரிய

இ நடுத்தர ஈ) அளவான

**விடை : அ) சிறிய**

**2. சிற்றளவு நிலையிட சில்லறை வியாபாரி என்பதனுள் ............... அடங்குவர்** Hy-2018

அ) இடம் பெயர் வியாபாரிகள்

ஆ) சுமை தூக்கும் வியாபாரிகள்

இ) பொதுப் பண்டகச் சாலைகள்

ஈ) வாகனத்தில் விற்போர்

**விடை : இ) பொதுப்பண்டகச் சாலைகள்**

**3. ஒரு குறிப்பிட்ட வகைப் பொருள்களை மட்டும் விற்கும் சில்லறைக் கடைகள் ....... என அழைக்கப்படுகிறது.** செப்-2021

அ) சந்தை வியாபாரிகள்

ஆ) ஒரே வகை பண்டகச் சாலைகள்

இ) பொதுப் பண்டகச் சாலைகள்

ஈ) தெருக்கடை வியாபாரிகள்

**விடை : ஆ) ஒரே வகை பண்டகச் சாலைகள்**

**4. நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்கு சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை ... என்பர்.** GMQ-2019 மே-2022

அ) மடங்கு கடைகள் ஆ) முகவர்கள்

இ) தெருக்கடை வியாபாரிகள்

ஈ) சுற்றாடும் வியாபாரிகள்

**விடை : ஈ) சுற்றாடும் வியாபாரிகள்**

### II. குறுவிடை வினாக்கள்

**1. மடங்குக் கடையின் பொருள் யாது?**

- ஒரே நிர்வாகத்தின் கீழ் பல கிளைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கிளையிலும் ஒரே வகையானப்
- பொருட்களும் அதைச் சார்ந்த பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. (எ.கா) பாட்டாஷு கம்பெனி - காலணிகள் - சாக்ஸ் - பாலிஷ் - பிரஷ்

**2. தானியங்கி விற்பனை எந்திரங்கள் என்றால் என்ன?**

- தானியங்கி விற்பனை எந்திரம் என்பது எந்திரம் வழியாக பொருட்களை நேரடியாக வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் விற்கும் எந்திரம் ஆகும்.
- இது நாணயங்கள், அட்டைகள் அல்லது வில்லைகள் கொண்டு இயங்கக்கூடியது.

**3. சிறப்புப் பண்டகச்சாலைகள் என்றால் என்ன?** மார்ச் - 2019 ஆகஸ்ட்-2022

- ஒரே வகைப் பொருட்களில் ஒரு குறிப்பிட்ட பொருளை மட்டும் விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள் சிறப்பு பண்டகசாலை எனப்படும்.
- இனிப்புக்கடைகள் - திருநெல்வேலி அல்வா மட்டும்.
- துணிகடைகள் - கைலி மட்டும். (சங்கு மார்க்கைலி)

### III. சிறுவிடை வினாக்கள்

**1. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 3)** Hy-2019 மார்ச் - 2019 செப்-2020. 2021

**பொருள் :**

- இது சுயசேவைப் பிரிவு முறையில் நடத்தப்படும் பேரளவு சில்லறை விற்பனை செய்யும் அமைப்பு ஆகும்.
- பொருட்கள் சுத்தம் செய்யப்பட்டு தரம், அளவு, எடை வாரியாகப் பிரிக்கப்பட்டு அதில் அதன் விலையும் குறிப்பிடப்பட்டிருக்கும்.
- நுகர்வோர் விற்பனையாளர்களின் உதவியின்றி தாங்களேப் பொருட்களைத் தேர்ந்தெடுத்து அதன் விலையைச் செலுத்தி கொண்டு செல்லலாம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- பெரும்பாலும் மளிகைப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் துணி, மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

**சிறப்பியல்புகள் :**

- இவைகள் பெரும்பாலும் நகரின் மையப்பகுதியில் அமைந்திருக்கும்.
- பொருட்களின் விலை, தரம், எடை மற்றும் ரகம் வாரியாகக் கட்டுமம் செய்து அறைகலனில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.
- வாடிக்கையாளர்கள் தேவையானப் பொருட்களைத் தாங்களே (சுயசேவைப் பிரிவு) எடுத்து வந்து காசாளரிடம் தொகையைச் செலுத்தி எடுத்துச் செல்லவும்.
- இங்கு ரொக்க விற்பனை மட்டுமே உண்டு. கடன் விற்பனை கிடையாது.
- துறைவாரி பண்டக சாலை போன்று அமைந்திருப்பதால் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்க முடிகிறது.

**2. மடங்கு கடைகளின் குறைபாடுகள் யாவை? விளக்குக. (ஏதேனும் 3)** மே-2022

**குறைபாடுகள்:**

1. **ஒரு சில பொருட்கள் மட்டும் விற்பனை:** மடங்குக் கடையில் குறிப்பிட்ட சில வகைப் பொருட்களை மட்டும் விற்பனை செய்வதால், வாடிக்கையாளர்கள் அவற்றை மட்டுமே வாங்க முடியும்.
2. **வசதிகள் இல்லாமை:** இக்கடைகளில் வாடிக்கையாளர் எதிர்பார்க்கும் கடன் விற்பனை, வீட்டு விநியோகம், ஓய்வறை, விளையாடுமிடங்கள் போன்ற வசதிகள் கிடைப்பதில்லை.
3. **நேரடித் தொடர்பின்மை:** உரிமையாளர் வாடிக்கையாளர்களிடம் நேரடித் தொடர்பு கொள்ள வாய்ப்பில்லை. ஊழியர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளரிடடும் ஊக்கத்துடன் பணியாற்ற வாய்ப்பில்லை.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. துறைவாரிப் பண்டகச்சாலையின் சிறப்பியல்புகளை விவரி.** GMQ-2019 மார்ச் - 2019 செப்-2021

**பேரளவு அமைப்பு :**

- ஒரே கூரையின் கீழ்ப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் வெவ்வேறு வகையான பொருட்கள் விற்கப்படுகின்றன.
- இது பேரளவு சில்லறை விற்பனை அமைப்பு ஆகும்.
- இது கூட்டுப்பங்கு நிறும அமைப்பு போன்று உருவாக்கப்படுகிறது.
- இதன் மேலாண்மை (நிர்வாகம்) இயக்குநரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

**பல்வகைப்பொருட்கள் விற்பனை :**

- நுகர்வோருக்குத் தேவையான (அத்தியாவசியமான) அனைத்துப் பொருட்களும் இங்கு கிடைக்கும்.
- ஊசி முதல் ஊர்தி வரை குண்டூசி முதல் குண்டு துளைக்கும் துப்பாக்கி வரை அனைத்தும் ஒரே இடத்தில் விற்கப்படுகின்றன.

**துறைகளின் ஒருங்கிணைப்பு :**

- ஒரே கூரையின் கீழ் அனைத்துத் துறைகளும், ஒருங்கிணைந்து செயல்படும்.
- ஒவ்வொரு துறையும் தனியே இயங்கினாலும் மற்ற துறைகளுடன் தொடர்பு கொண்டு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**வாங்கும் வசதிகள் (மகிழ்வுடன் வாங்குதல்)**

- வாடிக்கையாளர்களுக்கு ஓய்வறைகள். சிற்றுண்டிச் சாலை, வாகனம் நிறுத்துமிடம், குழந்தைகளுக்கு விளையாட்டு வசதிகள் இங்கு இருப்பதால் மகிழ்வுடனும் மனநிறைவுடனும் பொருட்கள் வாங்க முடிகிறது.

**மையக் கொள்முதல் :**

- அனைத்துத் துறைகளுக்கும் தேவையானப் பொருட்கள் ஒரு மையத்தின் மூலம், (மையக் கொள்முதல்) உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. சில்லறை வியாபாரிகளின் வகைகளை விவரி. (ஏதேனும் 5)** ஆகஸ்ட்-2022 மார்ச்-2023

1. **நடைபாதை வியாபாரிகள்:** வீதிகள் குறுக்கிடும் இடங்களின் ஓரங்களிலும், நடைபாதைகளிலும் தற்காலிகமாக பூ, பழம், காய்கறி, புத்தகங்கள் போன்றவற்றைக் கொண்டுவந்து விற்பனை செய்பவர்கள் நடைபாதை வியாபாரிகள் எனப்படுவர்
2. **சந்தை வியாபாரிகள்:** ஒரு குறிப்பிட்ட நாளிலோ அல்லது தேதியிலோ (ஞாயிற்றுக்கிழமைகளில், வெள்ளிக்கிழமைகளில், பத்தாம் தேதியில்) என நடைபெறும் சந்தைகளுக்குச் சென்று விற்பவர்கள் சந்தை வியாபாரிகள் எனப்படுவர். குறைந்த விலையுடைய ஒரு குறிப்பிட்ட வகையான அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் மட்டும் இவர்கள் வியாபாரம் செய்வர். எடு.கா. பொள்ளாச்சி, இராணிப்பேட்டை மற்றும் மணப்பாறை ஆகிய இடங்களில் நடைபெறும் வாரச் சந்தைகள்.
3. **சிறப்பு பண்டக சாலைகள்:** ஒரு வகைப் பொருட்களில் ஒரு குறிப்பிட்ட வழி பொருட்களை மட்டும் விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள் சிறப்பு பண்டக சாலைகள் எனப்படும். இனிப்பு வகையில் அல்வா மட்டும் விற்போர், துணிக்கடையில் குழந்தை ஆடைகள் மட்டும் விற்போர் முதலியன அடங்கும்.
4. **சிறப்பங்காடிகள்:** தேவையான பொருள்கள் அனைத்தும் பல்வேறு தரம், ரகம், வகை, விலை வாரியாகப் பிரித்து வைத்து நுகர்வோர்கள் தானே எடுக்கும் வகையில் அடுக்கி வைத்து விற்பனை செய்யும் ஒரு பேரளவு சில்லறை பண்டக சாலை சிறப்பங்காடி எனப்படும். இங்கு பெரும்பாலும் மளிகைப் பொருள்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், பாத்திரங்கள், ஆடை வகைகள், மின்சார, மின்னணு சாதனங்கள், மருந்துகள் முதலியவை விற்கப்படுகின்றன.
5. **இணைய தள சந்தை:** தயாரிப்பாளர்கள் அல்லது மொத்த வியாபாரிகள் தங்கள் பொருட்களை இணைய தளத்தில் மின்னஞ்சல் (e-mail) பிம்பங்கள் (Images) குறும்படங்கள் (Videos) ஆகியவை வைத்து விளம்பரம் செய்கிறார். வாடிக்கையாளர்கள் பொருளின், தரம், விலை, சிறப்பியல்புகள் ஆகியவற்றைப் பார்த்து தேர்ந்தெடுத்து இணையத்தின் வாயிலாக ஆணையிட்டு ரொக்கம் செலுத்தி தங்களின் வீட்டின் அருகிலேயே பெற்றுக்கொள்கிறார்கள். பிலிப்காார்ட், அமேசான், ஸ்னாப்டீல் போன்ற இணையதள செயலி (Apps) மூலம் நெடுநாள் நீடிக்கும் தன்மையுடைய பொருட்களை விற்கின்றனர்.

## பகுதி - II - கூடுதல் வினாக்கள்

### I. ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. சுற்றாடும் வியாபாரிகள் ............. எனவும் அழைக்கப்படுவர் **விடை : நகரும் வியாபாரிகள்**

2. அனைத்து வகைப் பொருட்களையும் குறைந்த அளவில் வாங்கி வைத்து செய்யப்படும் வியாபாரம் ........... எனப்படும். **விடை : பொது பண்டகசாலை**

3. **பட்டியல் I இல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப் பார்த்து கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க :**

| பட்டியல் -I | | பட்டியல் - II |
|---|---|---|
| i) தெருக்கடை வியாபாரிகள் | - | 1) புத்தகங்கள், பாத்திரங்கள் விற்பனையகம் |
| ii) ஒரே வகை பண்டகசாலை | - | 2) ஒருவகை பொருளில் ஒரு குறிப்பிட்ட வழி பொருள் விற்பனை |
| iii) சிறப்பு பண்டகசாலை | - | 3) குறிப்பிட்ட வகை பொருட்கள் மட்டும் விற்பனை |
| iv) பயன்படுத்திய பொருட்களை விற்போர் | - | 4) அனைத்து வகை பொருட்களும் கிடைக்கும் |

**தொகுப்பு :**

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

**விடை : அ) 4 3 2 1**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. **கீழ்க்கண்டவற்றுள் நிலையிட பேரளவு சில்லறை வியாபார நிறுவனங்களின் கீழ் வராததை தெரிவு செய்க .**

அ) துறைவாரி பண்டகசாலை ஆ) சந்தை வியாபாரிகள்

இ) மடங்கு கடைகள் ஈ) சிறப்பங்காடிகள் **விடை : ஆ) சந்தை வியாபாரிகள்**

5. துறைவாரிப் பண்டகசாலை மேலாண்மை ............ வசம் உள்ளது. **விடை : இயக்குநர்**

6. மடங்கு கடைகள் ............ எனவும் அழைக்கப்படுகிறது **விடை : தொடர் பண்டகசாலைகள்**

7. **பின்வருவனவற்றை பொருத்துக .** மார்ச் - 2020

| | | | |
|---|---|---|---|
| 1) | சுற்றாடும் நகரும் வியாபாரிகள் | - | i) பொதுப் பண்டக சாலைகள் |
| 2) | நிலையிட சிற்றளவு சில்லறை வியாபாரிகள் | - | ii) மைக்ரோமேக்ஸ் இன்பர்மேட்டிக்ஸ் |
| 3) | நிலையிட பேரளவு சில்லறை வியாபார அமைப்புகள் | - | iii) சாலையோர வியாபாரிகள் |
| 4) | பன்னாட்டு வணிகம் | - | iv) மடங்கு கிடைக்கும் |

அ) (1) - (ii); (2) - (iii); (3) - (iv); (4) - (i)

ஆ) (1) (iv); (2) - (iii); (3) - (i); (4) - (ii)

இ) (1) - (iii); (2) - (i); (3) - (iv); (4) - (ii)

ஈ) (1) - (iii); (2) - (iv); (3) - (ii); (4) - (ii) **விடை : இ) (1) - (iii); (2) + (i); (3) - (iv); (4) - (ii)**

## II. குறுவிடை வினாக்கள் – இரண்டு மதிப்பெண்கள்

1. **சுற்றாடி வரும் (அ) நடமாடும் சிற்றளவு சில்லறை வியாபாரி என்பவர் யார்? அவற்றின் வகைகளைக் கூறு.**

- கூவி விற்போர் மற்றும் தலைச்சுமை வியாபாரி
- நடை பாதை வியாபாரி (தெரு வியாபாரி)
- சந்தை வியாபாரி
- இடம் பெயர் வியாபாரி
- இவர்கள் வியாபாரம் செய்வதற்கு நிலையான இடம் இல்லாமல், குறைந்த விலையுள்ள குறைந்த பருமன் கொண்ட பொருட்களான மீன், காய்கறி, பழங்கள், போன்றவற்றைத் தலையில் வைத்தும், கூடையில் வைத்தும், தள்ளுவண்டியில் வைத்தும் சுற்றித்திரிந்து சந்தையில் வியாபாரம் செய்வார்கள்.
- இவர்களே சுற்றாடி வரும் வியாபாரி (அ) நடமாடும் வியாபாரி (அ) நகரும் வியாபாரி எனவும் அழைக்கப்படுகின்றன.

2. **கூவி விற்போர் மற்றும் தலைச் சுமை வியாபாரி பற்றிக் குறிப்பு வரைக.**

எடை குறைவானப் பொருட்களான மீன், காய்கறி, பழங்களை தலையில் சுமந்து கூடையில் வைத்து தள்ளுவண்டியில் வைத்துத் தெருத் தெருவாகச் சென்று தாங்கள் வைத்திருக்கும் பொருட்களை கூவி விற்பவர்கள்.

3. **நடைபாதை வியாபாரி (தெரு வியாபாரி) பற்றி குறிப்பு வரைக.**

- வீதிகள், தெருக்களின் ஓரங்களிலும், நடைபாதைகளிலும் தற்காலிகமாக பூ, பழம், காய்கறி, விற்பனை செய்பவர்கள்.
- இவர்கள் சாலை ஓர வியாபாரி, தெரு வியாபாரி, நடைபாதை வியாபாரி, பாதசாரிக் கடைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

4. **சந்தை வியாபாரிகள் :**

- ஒரு குறிப்பிட்ட நாளிலோ (அ) தேதியிலோ (வாரத்தின் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு இடங்களில்) என நடைபெறும் சந்தைகளுக்குச் சென்று விற்பவர்கள் சந்தை வியாபாரிகள் எனப்படுவர். (எ.கா) மதுரை ஞாயிற்றுக்கிழமைச் சந்தை

5. **இடம் பெயர் வியாபாரிகள் :**

- மக்கள் நெருக்கம் மிகுந்த வியாபாரம் நடக்கும் இடங்களில் தற்காலிகமாகக் கடை வைத்து சில நாட்கள் மட்டும் தங்கி இருந்து விற்பனை செய்பவர்கள் இடம் பெயர் வியாபாரிகள் எனப்படுவர்.
- இவர்கள் இடம் விட்டு இடம் சென்று பொருட்களை (துணிகள், காலணிகள், பிளாஸ்டிக் பொருட்கள்) விற்பனை செய்கின்றனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**6. நிலையிடச் சிற்றளவு சில்லறை வியாபாரி பற்றி குறிப்பு வரைக.**

➢ குறைந்த மூலதனத்தைக் கொண்டு அளவானப் பொருட்களை இருப்பாகக் கொண்டு குறிப்பிட்ட ஓர் இடத்தில் நிலையாக (இடம் பெயராமல்) வியாபாரம் செய்பவர்கள் நிலையிடச் சிற்றளவு சில்லறை வியாபாரிகள் ஆவர்.

**7. நிலையிடச் சிற்றளவு சில்லறை வியாபாரிகளின் வகைகள் யாவை?**

➢ தெருக்கடைகள்
➢ பொது பண்டகசாலை
➢ குறிப்பிட்ட வகைப் பண்டகசாலைகள்
➢ சிறப்புப் பண்டசாலைகள்
➢ பயன்படுத்தப்பட்ட பொருட்கள் விற்பனை செய்வோர்.

**8. தெருக்கடைகள் குறிப்பு வரைக.**

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள தெருக்களில் கடைகள் அமைத்து பெட்டிக்கடை மளிகை, தின்பண்டங்கள், குளர்பானம், போன்ற பொருட்களை விற்பனை செய்பவர்கள் தெருக்கடைகள் (அ) வீதிக்கடைகள் (அ) பெட்டிக்கடை வியாபாரி ஆவார்.

**9. குறிப்பிட்ட வகைப் (பொருட்கள்) பண்டக சாலை (அ) ஒரேவகைப் (பொருட்கள்) பண்டகசாலை.**

➢ ஒரு குறிப்பிட்ட வகைப் பொருட்கள் மட்டும் விற்பனை செய்யும் சில்லறை வியாபாரம் ஒரேவகை பண்டக் சாலை எனப்படும்.
➢ துணிக்கடை - வேஷ்டி சேலை, சட்டை, பனியன் போன்றவைகள்
➢ அறைகலன் கடை - மேஜை, நாற்காலி, மெத்தை போன்றவைகள்

**10. பயன்படுத்தியப் பொருட்கள் விற்போர் குறிப்பு வரைக.**

➢ பயன்படுத்திய பொருட்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்கள் முதல் தரமல்ல என்று ஒதுக்கிய பொருட்கள் விற்பனை செய்வோர் பயன்படுத்திய பொருட்கள் விற்பனை செய்வோர் ஆவார்.
➢ (எ.கா) புத்தகம், அறைகலன், வாகனங்கள், துணிக்கடைகள்

**11. நிலையிடப்பேரளவு சில்லறை வியாபார அமைப்பு பற்றி குறிப்பு வரைக.**

அதிக அளவு மூலதனத்துடன், பேரளவுப் பொருட்களை இருப்பாகக் கொண்டு குறிப்பிட்ட ஒரு இடத்தில் நிலையாகப் பேரளவில் சில்லறை வியாபாரம் செய்யும் நிறுவனங்கள் பேரளவு நிலையிடச் சில்லறை வியாபார அமைப்புக்கள் எனப்படும்.

**12. பேரளவு நிலையிடச் சில்லறை வியாபார நிறுவனங்களின் வகைகளை எழுது.**

1. துறைவாரி பண்டசாலை
2. மடங்குக்கடைகள்
3. சிறப்பங்காடிகள்
4. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்
5. வாடகைக் கொள்முதல், தவணைக் கொள்முதல்
6. அஞ்சல் வழி விற்பனையகங்கள்
7. தானியங்கி விற்பனை இயந்திரங்கள்
8. வணிக வளாகங்கள்
9. தொலை தொடர்பு வணிகம்
10. மின்னனுவழி வர்த்தகம்

**13. தானியங்கி விற்பனை எந்திரங்கள் பற்றி விளக்குக.**

➢ இது ATM இயந்திரம் போன்று இயங்குகிறது.
➢ வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களை நேரடியாக விற்கும் இயந்திரம்.
➢ இது நாணயங்கள் (அ) அட்டைகள் (அ) வில்லைகள் (Token) கொண்டு இயங்கக்கூடியது.
➢ இதை இயந்திரத்தின் உள் செலுத்தினால் குறிப்பிட்ட அளவுப்பொருள் வெளியில் வரும்
➢ (எ.கா)தானியங்கி ஆவின் பாலகம், தேநீர், குளிர்பானங்கள்.

**14. வணிக வளாகங்கள் (மால்ஸ்) பற்றி குறிப்பு வரைக.**

➢ நவீன காலத்திற்கேற்றவாறு வளர்ச்சி பெற்ற துறைவாரிப் பண்டசாலைகள் வணிக வளாகங்கள் (மால்) எனப்படுகிறது.
➢ அடுக்கு மாடி கொண்ட கட்டடத்தில் சிறிய கடைகள் முதல் பெரிய கடைகள் வரை தனித்தனி உரிமையாளர்கள் கொண்டு ஆடம்பரப் பொருட்கள் உட்பட அனைத்து வகைப் பொருட்களும் இங்கு விற்கப்படுகின்றன.
➢ எ.கா - விஷால்டிமால் - மதுரை
➢ பொழுதுபோக்கு வசதிகள், உணவகங்கள், குழந்தைகள் விளையாட்டுக்கள், திரையரங்கு, வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் இங்கு உள்ளன.

**15. தொலைதொடர்பு சந்தையிடுகை பற்றி குறிப்பு வரைக.**

➢ இதை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை 1. தொலைபேசிச் சந்தையிடுகை 2. தொலைக்காட்சி சந்தையிடுகை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**1. தொலைபேசிச் சந்தையிடுகை:**

- விற்பவர்கள் அப்பொருட்களை வாங்கும் திறன் மிக்கவர்களை தொலைபேசியிலோ (அ) அலை பேசியிலோ தொடர்பு கொண்டு பொருட்கள் (அ) சேவைகளைப் பற்றி எடுத்துரைப்பர். விருப்பமுள்ள வாடிக்கையாளர் பின் விற்பனைகத்திற்கு நேராகச் சென்று வாங்குவதையோ தொலைபேசிச்சந்தையிடுகை எனலாம்.
- (எ.கா) காப்பீடு, கடன் வழங்குதல், கடன் அட்டை போன்ற சேவைகள்

**2. தொலைக்காட்சி சந்தையிடுகை :**

- விற்பவர்கள், விற்கும் பொருள் (அ) சேவையைப் பற்றி விரிவாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்கின்றனர்.
- தொலைபேசி எண்ணும் இணையதள முகவரியும் கொடுக்கப்பட்டிருக்கும்.
- வாங்க விழையும் நபர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆணையை வழங்குபவர்.
- ஆணை பெற்றவுடன் பொருட்களை வீட்டிற்கே சென்று பணம் பெற்றுக் கொண்டு (Cash on delivery)
- பொருட்கள் வழங்கப்படும். எ.கா Shoppingzone, Tablemate.

**16. இணையதள சந்தையிடுதல் பற்றி குறிப்பு வரைக.**

- தயாரிப்பாளர்கள் (அ) மொத்த வியாபாரிகள் தங்களின் பொருட்களை இணையதளத்தில் மின்னஞ்சல், பிம்பங்கள், குறும்படங்கள், ஆகியவை வைத்து விளம்பரம் செய்கிறார்.
- வாங்குபவர், விலை, தரம் போன்றவைகளை சரிபார்த்து இணையத்தின் வாயிலாக ஆணை கொடுத்து ரொக்கம் செலுத்தி தங்கள் வீட்டின் அருகிலேயேப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம். (எ.கா) பிலிப்கார்ட், அமேசான் ஸ்னாப்டீல்

**17. பல்வேறு இடங்களில் கடைகளை அமைத்து ஒரே மாதிரியான பொருட்களை விற்பனை செய்யும் சில்லறை கடையின் பெயர் என்ன? ஓர் உதாரணம் தருக.** மார்ச் - 2020

- பல்வேறு இடங்களில் ஒரே மாதிரியான கடைகளை அமைத்துத் தரமான பொருட்களை விற்பனை செய்யும் சில்லறை கடைகள் மடங்கு கடைகள் எனப்படும்.
- இவற்றை அமெரிக்காவில் தொடர் பண்டகசாலைகள் என்றும், ஐரோப்பாவில் மடங்குக் கடைகள் என்றும் அழைப்பர். (எ.கா. பாட்டா)

**18. சில்லறை வியாபாரம் செய்தல் என்றால் என்ன?** Hy-2019

நுகர்வோருக்கு நேரடியாகப் பொருட்களையும், சேவைகளையும் சிறிய அளவில் விற்பனை செய்யும் நடைமுறை சில்லறை வியாபாரம் செய்தல் ஆகும்.

**19. திரு.இராம் அவர்கள் பல்வேறு இடங்களில் கடைகளை அமைத்து ஒரே மாதிரியான தரமான பொருட்களை விற்பனை செய்து வருகிறார். இவை எவ்வகையான சில்லறை வியாபார கடைகள்?** ஆகஸ்ட்-2022

மடங்கு கடைகள் (அல்லது) தொடர் பண்டகச் சாலைகள்

## III. சிறுவிடை வினாக்கள் - மூன்று மதிப்பெண்கள்

**1. துறைவாரி (பல பிரிவு) பண்டகசாலை என்றால் என்ன?**

- ஒரே கூரையின் கீழ் பல பிரிவுகளாகப் பல துறைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் வெவ்வேறு வகையானப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
- நுகர்வோருக்கு அத்தியாவசியமான அனைத்துப் பொருட்களும் ஒரே இடத்தில் கிடைக்கின்றன.
- (எ.கா) இந்தியாவின் தரைப்படை, கப்பற்படை பண்டகசாலைகள்
  ஸ்பென்ஸர்ஸ் - சென்னை
  ஸீர்ஸ், ரூபெக் - அமெரிக்கா

**2. மடங்கு கடையின் குறைபாடுகள் யாவை?**

**ஒருசில பொருட்கள் மட்டும் விற்பனை :**

- மடங்குக் கடையில் குறிப்பிட்ட சிலவகைப் பொருட்கள் மட்டும் விற்பனை செய்யப்படுகின்றன.

**வசதிகள் இல்லாமை :**

- இக்கடையில் வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கும் கடன் விற்பனை, ஓய்வறைகள், சிற்றுண்டிச் சாலை, வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகள் இல்லை .

**நேரடித் தொடர்பின்மை :**

- உரிமையாளர் வாடிக்கையாளரிடம் நேரடித் தொடர்பு கொள்ள வாய்ப்பில்லை.

**3. வாடகைக் கொள்முதல் முறை - தவணைக் கொள்முதல் முறை விளக்குக.**

- பொருள் வாங்குவோர், விற்குநருக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட விலையைப் பல மாதங்கள் (அ)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பல ஆண்டுகள் நீடிக்கும் தவணைகளில் செலுத்த ஒப்புக்கொள்ளும் முறை வாடகைக் கொள்முதல் முறை (அ) தவணைக் கொள்முதல் முறை எனப்படும்.

- இரு முறைகளுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு யாதெனில் தவணைக் கொள்முதல் முறையில் முதல் தவணைக் தொகை செலுத்தியவுடன் பொருட்களின் உரிமையாளராகலாம். ஆனால் வாடகைக் கொள்முதல் முறையில் இறுதித் தவணைத் தொகை செலுத்தினால் தான் பொருட்களின் உரிமையாளராக முடியும்.

**4. பொதுப் பண்டக சாலைகளின் இயல்புகளைக் கூறுக.**

- நுகர்வோர் தங்கள் வீட்டின் அருகிலேயே தங்களுக்கு தேவையான பல்வேறு வகைப் பொருட்களை வாங்குவதற்கு ஏற்றவாறு வாங்கி வைத்து வியாபாரம் செய்யும் இடம் பொதுபண்டக சாலைகள் எனப்படும்.
- (எ.கா) பல சரக்கு , மளிகை, எழுதுபொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், தின்பண்டங்கள், குளிர்பானங்கள், போன்ற அனைத்தும் கிடைக்கும்.
- பெரும்பாலான நேரங்களில் கடைகள் திறந்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதியும் உண்டு.

## IV. பெருவிடை வினாக்கள் - ஐந்து மதிப்பெண்கள்

**1. துறைவாரி பண்டக சாலையின் நன்மைகள் யாவை?**

**வாங்கும் வசதி :**

- நுகர்வோருக்குத் தேவையான (அத்தியவசியமான) அனைத்துப் பொருட்களும் , ஒரே கூரையின் கீழ் ஒரே
- இடத்தில் வாங்கலாம்.
- இதனால் நேரமும், உழைப்பும் மிச்சப்படுத்தப்படுகின்றன.

**மகிழ்வுடன் வாங்குதல் (வாங்கும் வசதிகள்) :**

- வாடிக்கையாளர்களிடமிருந்து ஓய்வறைகள், சிற்றுண்டிச் சாலை, வாகனம் நிறுத்துமிடம் விளையாட்டு வசதிகள் இங்கு இருப்பதால் மகிழ்வுடனும் மன நிறைவுடனும் பொருட்கள் வாங்க முடிகிறது.

**மைய இட அமைவு:**

- பொதுவாகத்துறை வாரிபண்டகசாலைகள் நகரின் மையப்பகுதியில் தான் அமைந்திருக்கும். ஆகவே நகரின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும், பிற ஊர்களிலிருந்தும், நுகர்வோர் வந்து செல்லும் வசதி எளிதாக உள்ளது.

**இடைநிலையர்கள் நீக்கம் :**

- உற்பத்தியாளர்களிடமிருந்து (மையக்கொள்ளும்) பொருட்கள் - நேரடியாகக் கொள்முதல் செய்யப்படுவதால் முகவர்கள், வியாபாரிகள், போன்ற இடைநிலையரக்ள் தவிர்க்கப்படுகின்றன. இதனால் தரமான பொருட்களை மலிவான விலையில் வழங்க முடிகிறது.

**பேரளவால் உண்டாகும் சிக்கனங்கள் :**

- தேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு பேரளவுக் கொள்முதல், விற்பனை, கணக்கு பராமரித்தல், நிர்வாகம், செய்யப்படுவதால் எல்லா நன்மைகளும் கிடைக்கின்றன.

**2. துறைவாரி பண்டக சாலையின் குறைபாடுகள் யாவை?**

**கூடுதல் நடைமுறைச் செலவு :**

- நகரின் மைய இடத்தில் அமைவதாலும், விளம்பரம், வாடிக்கையாளருக்கான வசதிகள், பணியாட்கள், ஊதியம், பராமரிப்பு உள்ளிட்டவைகளால் கூடுதல் செலவு ஏற்படுகிறது.

**அதிக விலை :**

- நடைமுறைச்செலவுகள் கூடுதலாக இருப்பதால், பொருட்களின் விலை கூடுதலாகவே இருக்கிறது. செல்வந்தர்கள் மட்டுமே வாங்கக்கூடிய வகையில் அமைகிறது.

**தொலைவு :**

- இது மக்கள் வசிக்கும் இருப்பிடங்களிலிருந்து தொலைவில் இருப்பதால் உடனுக்குடன் வாங்க வேண்டிய சிலபொருட்களுக்காக (பழங்கள், காய்கறிகள்) மையப்பகுதிக்குச் செல்ல மக்கள் தயங்குவர்.

**நேரடித் தொடர்பின்மை :**

- உரிமையாளருக்கு ஒவ்வொரு வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பு இல்லாததால், தனிப்பட்ட கவனம் செலுத்த முடிவதில்லை .
- எனவே நுகர்வோர் சிறிய சில்லறை விற்பனைக் கடைகளுக்கேச் செல்ல விரும்புகின்றனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**அதிக முதலீடு**

- துறைவாரிப்பண்டக சாலைகளைத் தொடங்க அதிக முதலீடு தேவை. அதைத் தொடர்ந்து நடத்தவும், மேலாண்மை செய்யவும் திறமையான மேலாளர்கள் மற்றும் ஊழியர்கள் தேவைப்படுகின்றனர்.

**3. மடங்குக் கடைகளின் சிறப்பியல்புகள் யாவை?**

**அமைவிடம் :**

- போதுமான அளவிற்கு வாடிக்கையாளர்கள் அணுகுவதற்கு ஏற்றவாறு மக்கள் நெருக்கம் மிகுந்த வாழ்விடங்கள் மற்றும் பணிபுரியும் இடங்களுக்கு அருகில் இக்கடைகள் அமைந்திருக்கும்.

**பொருளின் தன்மை :**

- நீடித்து உழைக்கக் கூடிய ஒரே வகையானப் பொருட்களும் அதைச் சார்ந்த பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.
- எ.கா) பாட்டாஷூகம்பெனி - காலணிகள் - சாக்ஸ், பாலீஷ், பிரஷ் போன்றவைகள்.

**மைய மேலாண்மை :**

- இக்கடைகளில் விற்கப்படும் பொருட்கள் அனைத்தும் ஓரிடத்தில் தயாரிக்கப்பட்டு மையக் கொள்முதல் செய்யப்படுகின்றன.
- தலைமை அலுவலகத்திலிருந்து, கிளைகளுக்குப் பொருட்கள் தேவைக்கேற்றவாறு அனுப்பப்படுகின்றன.
- கிளைகளை கிளை மேலாளர்கள் மேலாண்மை செய்கின்றனர்.
- தலைமை அலுவலகம், அனைத்துக் கிளைகளின் விற்பனை , சரக்கிருப்பு, வரவு - செலவு கணக்குகளைக் கண்காணிக்கிறது.

**ஒரேவிலை, ரொக்க விற்பனை :**

- அனைத்துக்கிளைகளிலும் பொருட்களின் விலை ஒரே விலையாக நிர்ணயிக்கப்படுகிறது.
- வராக்கடன் நட்டத்தைக் தவிர்க்க அனைத்துக் கிளைகளிலும் ரொக்கத்திற்கு மட்டுமே பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

**விற்பனையாளர்களின் பணி :**

- வாடிக்கையாரின் விருப்பத்திற்கேற்றவாறு பொருட்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவதற்கு முழு ஒத்துழைப்பையும் இங்குள்ள விற்பனையர் நல்குவர்.

**4. மடங்குக் கடையின் நன்மைகள் யாவை?**

**பேரளவின் சிக்கனம் :**

- மடங்குக் கடைகள் அனைத்தும் உற்பத்தியாளர் (அ) மொத்த வியாபாரி சொந்தக் கடைகளாக நடத்துகின்றனர்.
- மையக் கொள்முதல், மைய மேலாண்மை ஒரே விளம்பரம் மூலம் சிக்கனம் ஏற்படுவதால் விலை குறைக்கப்படுகிறது.

**இடைநிலையர் நீக்கம் :**

- இக்கடையில் பொருட்கள் நுகர்வோருக்கு நேரடியாக விற்கப்படுவதால் இடைநிலையங்களை இது நீக்குகிறது.

**வாராக்கடன் இல்லை :**

- அனைத்துப் பொருட்களும் ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனைச் செய்யப்படுவதால் வாராக்கடன் ஏற்படுவதில்லை .
- மேலும் நடைமுறை முதல் குறையவும் வாய்ப்பில்லை.

**வாங்குமிட வசதி :**

- நகரின் பல்வேறு முக்கிய இடங்களில் கிளைகள் (கடைகள்) அமைவதால் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியதில்லை.
- கடையின் தோற்றம் ஒரே மாதிரியாக இருப்பதால் எளிதாகச் கண்டுபிடிக்கலாம்.
- பொருட்களைத் தேர்ந்தெடுத்து வாங்க விற்பனையாளர்கள் உதவி செய்வர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**விளம்பரச் செலவு குறைவு :**

➢ அனைத்துக் கிளைகளுக்கும் (கடைகளுக்கும்) பொதுவாக விளம்பரம் செய்யப்படுவதால் விளம்பரச் செலவு குறைகிறது.

**5. துறைவாரி பண்டக சாலைக்கும் (பல பிரிவு பண்டக சாலை) மடங்குக் கடைகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

| எண் | தலைப்பு | துறைவாரி பண்டகசாலை | மடங்குக் கடை |
|---|---|---|---|
| 1. | வரை விலக்கணம் | ஒரே கூரையின் கீழ் பல பிரிவு (பலதுறைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் வெவ்வேறு வகையினைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. (ஊசி முதல் ஊர்தி வரை) | ஒரு நிர்வாகத்தின் கீழ் பல கிளைகளாகப் (கடைகள்) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கிளையிலும் ஒரே வகையானப் பொருட்களும் அதைச் சார்ந்த பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. (காலணி, சாக்ஸ், பாலிஷ், பிரஷ்) |
| 2. | இட அமைவு | பெரிய நகரங்களின் மையப் பகுதியில் அமைந்திருக்கும். | பொதுவாக வாடிக்கையாளர் வசிக்கும் இடங்களின் அருகில் அமைந்திருக்கும். |
| 3. | வாங்கும் பொழுது வசதிகள் | ஓய்வறை, சிற்றுண்டிச் சாலை, வாகனம் நிறுத்துமிடம், குழந்தைகளுக்கு விளையாட்டு வசதிகள் உண்டு. | எவ்வகை வசதிகளும் கிடையாது. |
| 4. | வாராக்கடன் | கடன் விற்பனை உண்டு. இதனால் வாராக்கடன் நட்டம் ஏற்படும். | ரொக்க விற்பனை மட்டும் இதனால் வாராக்கடன் நட்டம் ஏற்படாது. |
| 5. | சரக்கு இடமாற்றம் | ஒரு துறையில் தீரும் சரக்கை அடுத்தத் துறையிலிருந்து பெற்று தட்டுப்பாட்டை சமாளிக்க இயலாது. | மற்றக் கிளைகளிடமிருந்து சரக்கைப் பெற்று தட்டுப்பாட்டைச் சமாளிக்கலாம். |
| 6. | முதல் | அதிக முதல் தேவை | குறைந்த முதல் போதுமானது. |

**6. வாடகைக் கொள்முதல் முறைக்கும், தவணை விற்பனை முறைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.**

| எண் | தலைப்பு | வாடகைக் கொள்முதல் முறை | தவணை விற்பனை முறை |
|---|---|---|---|
| 1. | விற்பனை ஒப்பந்தம் | இது ஒப்பந்த விற்பனை அல்ல. ஏனெனில் இறுதித் தவணை செலுத்தும் வரை பொருளின் உரிமை விற்பனையாளரிடமே உள்ளது. | இது ஒப்பந்த விற்பனை ஆகும். முதல் தவணைத் தொகை செலுத்திய உடனேயே வாங்குநர் உரிமையாளர் ஆகிறார். |
| 2. | வாங்கியவரின் உரிமைகள் | பொருட்களை வாங்கியவர் அதை வாடகைக்கோ அல்லது விற்கவோ அல்லது அடகு வைக்கவோ முடியாது. | பொருட்களை வாங்கியவருக்கு அப்பொருட்களின் மீது முழு உரிமையும் இருப்பதால், அவர் அப்பொருளை வாடகைக்கோ அல்லது விற்கவோ (அல்லது) அடகு வைக்கவோ முடியும். |
| 3. | நடவடிக்கை | தவணைத் தொகையைச் செலுத்தத் தவறினால், வாங்கியவரிடமிருந்து பொருட்களைத் திரும்ப எடுத்துக் கொள்ளவும், இதுவரை செலுத்திய தொகையைத் திருப்பி அளிக்காமலும் இருக்க விற்பனையாளருக்கு உரிமை உண்டு . | தவணைத் தொகையை வாங்கியவர் செலுத்தத் தவறினால், அப்பொருளை மீண்டும் திரும்ப எடுத்துக் கொள்ள ஒரு விற்பனையாளரால் முடியாது. ஆனால் தனது தொகையைப் பெற வாங்கியவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளலாம். |

**7. அஞ்சல்வழி வியாபாரத்தைப் பற்றி விளக்குக.**

**பொருள் :**

➢ வாடிக்கையாளர்களிடமிருந்து ஆணைகளைப் பெற்று பொருட்களை அஞ்சல் வழியாக அவர்களின் வீட்டிற்கே முகவரிக்கே) அனுப்பி வியாபாரம் செய்வதே அஞ்சல் வழி வணிகம் எனலாம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**சிறப்புக்கூறுகள் :**

**விளம்பரம் :**

- எல்லா இடங்களுக்கும் செய்தித்தாட்கள், பருவ இதழ்கள், தொலைக்காட்சி வானொலி ஆகியவற்றின் மூலம் அஞ்சல் வழி வணிக நிறுவனம் பரவலாக விளம்பரம் தருகின்றன.

**முகவரிப்பட்டியல் தயார் செய்தல் :**

- அஞ்சல் வழி வணிகத்தின் முதற்பணி முகவரிப்பட்டியல் தயார் செய்வதாகும்.

**சரக்கு ஆணைகளைப் பெற்று சரக்கை அனுப்புதல் :**

- வாடிக்கையாளர்களிடமிருந்து சரக்கு ஆணைகளைப் பெற்றவுடன் சரக்குகளை முறையாகக் கட்டுமம் செய்து பதிவுப்பார்சல் அஞ்சல் (அ) மதிப்பு செலுத்தத் தக்க அஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது.
- சரக்குகள் அதிகப்பருமன் இருப்பின், லாரிகள், இரயில்கள் மூலம் அனுப்பப்படும்.

**நன்மைகள் :**

- வீட்டில் இருந்து கொண்டே நுகர்வோர் தங்களுக்குத் தேவையானப் பொருட்களை பெற முடிகிறது.
- வாடிக்கையர் அஞ்சல் வழி மூலம் சரக்கினைப் பெறும் வரை, செலுத்த வேண்டிய தொகைக்கு ஏற்பாடு செய்யலாம்.
- வாணிகத்தைத் தொடங்கக் குறைந்த முதல் போதுமானது. கண்கவர் சாளரக் காட்சிகள் விற்பாண்மையர் தேவையில்லை என்பதால் இயக்கச் செலவுகள் குறைவு.

**(மதிப்பு செலுத்த தக்க அஞ்சல்)**

- சரக்குகளை VPP யில் அனுப்புவதால் வாராக்கடன் நட்டம் ஏற்படுவதில்லை .

**தீமைகள் (குறைகள்) :**

- படிப்பறிவற்ற மக்களுக்கு இவ்வணிகம் ஏற்றதல்ல.
- கடன் விற்பனை கிடையாது.
- இவ்வணிகத்தில் மக்களை ஏமாற்றும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

**8. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை என்றால் என்ன? அதன் நன்மைகள் யாவை?**

**பொருள் :**

- நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை ஒரு பேரளவு சில்லறை விற்பனை அமைப்பாகும்.
- இதுகுறைந்தது 25 நபர்களைக் கொண்டு கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து உருவாக்கப்படுகிறது.
- நுகர்வோர் தங்களின் பொது நலனுக்காக, தாங்களே தங்களுக்காக ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு அமைப்பு ஆகும்.
- உற்பத்தியளாரிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து தமது உறுப்பினர்களுக்குக் குன்றாத தரம், குறைவிலா எடை, கூடுதலில்லா விலையில் பொருட்கள் விற்பனை செய்கிறது.

(எ.கா) காமதேனு - சென்னை

சிந்தாமணி - கோவை, திருச்சி

கற்பகம் - வேலூர், விழுப்புரம்

பொன்னி - சேலம்

பாண்டியன் - மதுரை

**நன்மைகள் - நிறைகள் :**

- கூட்டுறவு பண்டசாலையின் தொடக்க முதல் உறுப்பினர்கள் வாங்கும் பங்குகளின் மூலம் கிடைக்கிறது.
- பங்குகளின் மதிப்பு குறைவாக இருப்பதால், சமுதாயத்தின் நலிந்த பிரிவினரும் அதன் உறுப்பினர் ஆகலாம்.
- மக்களாட்சி முறையில் ஒருநபர் - ஒரு வாக்கு கடைபிடிக்கப்படுகிறது.
- உறுப்பினர்களுக்குக் குன்றாத தரம், குறைவிலா எடை, கூடுதலில்லா விலையில் பொருட்கள் எளிதில் கிடைக்க வழிவகை செய்கிறது.
- ரொக்கத்திற்கு மட்டுமே பொருட்கள் விற்பனை செய்யப்படுவதால் வாராக்கடன் நட்டம் ஏற்படுவதில்லை.
- இதற்கு அரசு பல சலுகைகள் (பதிவுக்கட்டணம், முத்திரைத்தாள், வரி, வருமானவரி வழங்குகின்றன.

**9. உள்நாட்டு வியாபாரத்தில் தொழில்வர்த்தகச் சங்கங்களின் பங்கினை விவரி.**

**தொழில் வர்த்தகச் சங்கங்கள் :**

- இது வாணிபம் மற்றும் தொழில் நலன் காக்கும் இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.
- இது மாநிலத்தின் (அ) மாவட்டத்தின் தொழிலதிபர்கள், வியாபாரிகள், நிதியாளர்களால் உருவாக்கப்பட்ட சங்கமாகும்.
- அனைத்து தொழிலமைப்புக்களும் சங்க உறுப்பினர்களாகச் செயல்பட்டு மைய, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் நல்லுறவு கொண்டு பிரச்சனைகளைத் தீர்த்து வளர்ச்சி பெறுவது இதன் முக்கிய நோக்கமாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



எ.கா FICCI - Federation of Indian Chamber of commerce and Industry.
ASSOCHAM - Associated Chamber of Commerce
CII - Confederation of Indian Industry
Tamil Nadu Chamber of commerce
Tamil Nadu Traders Association

**செயல்பாடுகள் :**

- இச்சங்கம் நாட்டிலுள்ள வியாபார வர்த்தக, தொழிற்சாலைகளுக்குச் பாதுகாவலனாகச் செயல்படுகிறது.
- நாட்டின் உள்நாட்டுப் வியாபாரம் பெருக்கத்திற்கு செயல் ஊக்கியாகத் திகழ்கிறது.
- வியாபாரம், தொழில், தொழிற்சாலைகளின் கொள்கைகள், திட்டங்கள் உருவாக்குவதில் அரசுடன் இணைந்து செயல்படுகிறது.

**உள்நாட்டு வியாபாரத்தில் வர்த்தகச் சங்கங்களின் பங்கு :**

- மாநிலங்களுக்கிடையேப் போக்குவரத்து விதிமுறைகள், நெடுஞ்சாலைகள், சரக்குகள் பரிமாற்றத்தினை வசதிகளை உருவாக்குதல்.
- மத்திய சரக்கு மற்றும் சேவை வரி, மாநிலசரக்கு மற்றும் சேவைவரி ஒருங்கிணைத்தல்.
- வேளாண் பொருட்கள், விற்பனைக்குத் திட்டமிட்டு அரசுகளுக்கு ஆலோசனை வழங்குதல்.
- கலப்படம், எடை குறைதல், சரியான அளவு இல்லாமல் இருத்தல் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.
- அரசுகளுடன் பேசி மின்வசதி, சாலை வசதி, தொடர் வண்டி வசதி, துறைமுகங்கள் போன்றவைகளை விரிவாக்கம் செய்தல்.
- தொழிலாளர் சட்டங்கள், வேலை வாய்ப்பு, வேலைக் குறைப்பு , ஈடுபடுதல் போன்றவை பற்றி அரசுடன் பேசி முடிவு எடுத்தல்.

*****

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



37. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருட்களுக்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக. அத்தியாயம் - 22

38. இருதரப்பு வாக்குறுதிகளின் வகைகள் யாவை? அத்தியாயம் - 30

39. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 3) அத்தியாயம் - 33

40. சிறு குறிப்பு வரைக: அத்தியாயம் - 26

i) செலுத்துகைக்கு பிறகு ஆவணங்கள்

ii) ஏற்புக்கு பிறகு ஆவணங்கள்

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7 x 5 = 35**

41. அ) உற்பத்தி தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க. அத்தியாயம் - 3

**(அல்லது)**

ஆ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? அத்தியாயம் - 6

42. அ) பொது கழகத்தின் ஏதேனும் மூன்று நிறைகள் மற்றும் மூன்று குறைகளை விளக்குக. அத்தியாயம் - 9

**(அல்லது)**

ஆ) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் யாவை? அத்தியாயம் - 21

43. அ) பல்வேறு வகையான வங்கிகளை செயல்பாடுகளின் அடிப்படையில் விவரிக்கவும். (ஏதேனும் 5) அத்தியாயம் - 11

**(அல்லது)**

ஆ) வருமான வரியின் அடிப்படை கருத்துக்கள் எவையேனும் ஐந்தினை விளக்கி எழுதுக. அத்தியாயம் - 32

44. அ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? அத்தியாயம் - 29

**(அல்லது)**

ஆ) தொழில் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளை விளக்கவும். அத்தியாயம் - 18

45. அ) போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்கவும். (ஏதேனும் 5) அத்தியாயம் - 14

**(அல்லது)**

ஆ) பன்னாட்டு நாணய நிதியத்தின் (IMF) பணிகளைக் குறிப்பிடுக. (ஏதேனும் 5) அத்தியாயம் - 27

46. அ) உலகளாவிய வைப்பு இரசீதையும் அமெரிக்க வைப்பு இரசீதையும் வேறுபடுத்துக. (ஏதேனும் 5) அத்தியாயம் - 20

**(அல்லது)**

ஆ) சில்லறை வியாபாரிகளின் வகைகளை விவரிக்கவும் (ஏதேனும் 5) அத்தியாயம் - 24

47. அ) வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்கவும். அத்தியாயம் - 22

**(அல்லது)**

ஆ) செலுத்தல் சமநிலையின் சிறப்பம்சங்கள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும். அத்தியாயம் - 28

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com